ஒளி : 04 கதிர் : 03 2025 ஜூலை -செப்டம்பர்

# அவிர் 15

## கலை இலக்கிய முத்திங்கள் இதழ்



350/=

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு

# சஞ்சிகை செயற்குழு



நிர்வாக ஆசிரியர்
சம்மாந்துறை மஷூறா



சஞ்சிகை ஆசிரியர்
லரீபா பதூர்தீன்
கலேவெல



ஷாமென் நிஸாம்டீன்
கட்டுகஸ்தோட்டை



வஃபீரா வஃபீ
கொழும்பு



சுஸானா முனாஸ்
மூதூர்



அஸ்மா தீன்
கம்பளை



மஹ்ரீஸா பானு ஜெஸூர்
சம்மாந்துறை



மர்ளியா சக்காப்
திருகோணமலை



ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி



பாரா தாஹிர்
மாவனெல்லை



மிஸ்ரியா அமீன்
கிண்ணியா



ஜெஸீனா நிஸ்றீன்
சாய்ந்தமருது



றம்ஸானா ஸமீல்
அக்கரைப்பற்று



நௌஷா ஜமால்தீன்
சம்மாந்துறை



பானு ஜிப்ரி
சாய்ந்தமருது



றபீதீன் றபீஉல் பஸ்ரானா
நேகம

# அவரி 15

ஆற்றலுள்ள பெண்களின் அமைப்பான SRI LANKA PEN CLUB
முத்திங்கள் வெளியீடு


**ஒளி : 04 கதிர் : 03 2025 – ஜூலை – செப்டம்பர்**



அவரி ஆசிரியர் குழு.

நிர்வாக ஆசிரியர்
சம்மாந்துறை மஷூறா

இதழாசிரியர்
லரீபா பதூர்தீன்.
கலேவல.

## சஞ்சிகை செயற்குழு

ஷாமென் நிஸாம்டீன்.
கட்டுகஸ்தோட்டை.

வ.ஃ.பீரா வ.ஃ.பீ.
கொழும்பு.

சுஸானா முனாஸ்.
மூதூர்.

அஸ்மா தீன்.
கம்பளை.

மஹீஸா பானு ஜெஸூர்.
சம்மாந்துறை.

மர்ளியா சக்காப்.
திருகோணமலை.

ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி.

பாரா தாஹிர்.
மாவனெல்லை.

மிஸ்ரியா அமீன்.
கிண்ணியா.

ஜெஸீனா நிஸ்றீன்.
சாய்ந்தமருது.

றம்ஸானா ஸமீல்.
அக்கரைப்பற்று.

நௌஷா ஜமால்தீன்.
சம்மாந்துறை.

பானு ஜிப்ரி.
சாய்ந்தமருது.

எம்.ஆர்.ரபீஉல் பஸ்ரானா
நேகம
(முன் பின் உள் அட்டைகள்
வடிவமைப்பு



நிர்வாக அலுவலகம்

மஷூறா மஹால் 4/C/5/லேக் வீதி, மருதமுனை 04

**0765363434 / 0770696559 / 0672261044**



**ISSN: 2961-5194**

## தூரநோக்கு

கலாசாரத்தினூடாக கலையிலக்கியங்களைக் கட்டியெழுப்புவதும்
ஆற்றலுள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்

## நோக்கக் கூற்று

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும்
களங்கள் அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்

# SRI LANKA PEN CLUB கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்
Sri Lanka Pen Club ///

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா....
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி.....

கலைகளும் செய்வோம் சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு....
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்.....

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை....
கலாசார மீறல்களற்ற தோருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்.....

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்....
சிதைந்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்....!!!

- பாடலாக்கம்:- சம்மாந்துறை மஷூறா -

# நிர்வாக ஆசிரியரின் செய்தி.



**அன்புடன்**

**இலக்கிய வித்தகர்**

**சம்மாந்துறை மஷ்ஹூறா JP.**

நான்காவது ஆண்டின் மூன்றாவது இதழில் சந்திப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி. இந்த அவரியின் நிர்வாக ஆசிரியர் செய்தி மூலம் சமூகத்திற்கு அவசியமான ஒரு செய்தியை முன் வைக்கலாமென கருதுகிறேன்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலைக் கல்வி சவால் மிகுந்ததா காணப்படுகிறது. அன்றைய கால கட்டத்தில் ஆசிரயர்கள் தண்டிப் பதற்கு தகுதியானவர்களாயிருந்தனர். அதன்காரணமாக சிறந்த கல்வியோடு நல்லொழுக்கமும் வாழ்க்கைத் தேர்ச் சிகளும் சிறந்த அடைவுகளைத் தந்தன .இன்று அடைவுகள் சிறந்த தாயிருந்தாலும் நல்லொழுக்கம் பூச்சியமாகி விட்டிருக்கிறது. பிள்ளை களை கண்டிக்கவோ தண்டிக்கவோ உரிமை இல்லாத காரணத்தால் ஆசிரியர்களை மாணவர்களும் மதிப் பதில்லை.சின்னச்சின்ன பிரச்சினைக் கெல்லாம் மனித உரிமை மீறல் வழக்குப் போட்டு விடுகின்றனர். நமக் கேன் இந்த சவால் என நினைத்து அனேக ஆசிரியர்கள் மாணவர்களின் நடத்தை முரண்களையிட்டு பாராமுக மாக ஒதுங்க விடுகின்றனர். ஆசிரியர் களிலும் தவறிருக்கிறது. பாடசாலை யில் ஒரு அலகும் ரியூஷனில் இன் னொரு அலகுமாக முடிக்கும் ஆசிரியர் களை பிள்ளைகள் எப்படி மதிக்கும்.

பாடவேலைகள் செய்யவோ படிக்கவோ பெரும்பாலான மாணவர்க ளுக்கு ஈடுபாடில்லை. அதை ஆசிரியர் கள் கண்டுகொள்ளாமல் கடந்து போக வேண்டுமென்றே மாணவர்கள் விரும்பு கிறார்கள்.

மாணவர்கள் இன்று ஒழுக்கச் சீர்கேட்டில் மூழ்கிக் கிடக்கின்றனர். போதை வஸ்து பாவனை வேறு இவர் கள் வாழ்க்கையை சீரழிக்கிறது. மாணவர்களின் நடத்தைப் பிறழ்வுக்கு முக்கிய காரணம் பெற்றார்களே என்ப தில் சந்தேகமில்லை. பிள்ளை வீட்டி லிருந்துதான் அனுமதியோடு மார்க்கத் திற்கு பொருத்தமற்ற உடைகளை அணிந்து கொண்டு புறப்படுகிறது. இனிவரும் இதழ்களில் விரிவாக பேசுவோம்.

இந்த அவரி 15 ன் ஆசிரியர் கலேவெல லரீபா பதூர்தீன் என் சம கால எழுத்தாளர். நீண்டகாலமாக எழுத்துலகிலிருந்து ஒதுங்கியிருந் தவரை இழுத்து வந்து இந்த SLPC அமைப்பிற்குள் உள் வாங்கியதில் மீண்டும் எழுதலானார். இன்று அவரி யின் ஆசிரியராக இன்னொரு மைல்கல்லை நகர்த்தியிருக்கிறார். வாழ்த்துக்கள் லரீபா.

# சஞ்சிகையாசிரியரின் செய்தி.

**லரீபா பதுர்தீன் – கலேவெல**



## அஸ்ஸலாமு அலைக்கும்

ஸ்ரீலங்கா பென்கிளப்பின் வெளியீடான அவரி 15 வது இதழினை உங்கள் கைகளில் தவழவிடுவதில் மகிழ்ச்சியடைகிறன். நிர்வாக ஆசிரியராக இருந்து அவரி சஞ்சிகையை வழிநடாத்தும் எம் ஸ்தாபகத் தலைவி திருமதி மஷூறா சுஹறுத் தீன் அவர்கள் எம் அமைப்பின் பெண்களை ஒரு தாயாக அரவணைத்து அவர்களின் ஆற்றல்களை இனங் கண்டு அதற்கான களமமைத்துக் கொடுத்து சிறந்த முறையில் அவ்வழியே பயணிக்க தூண்டி விடுவதில் அவருக்கு நிகர் அவரே.

அந்த வகையில் அவரி இதழ் 15 இன் இதழாசிரியராகப் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்ததில் பெருமகிழ்ச்சியே.

எனது எழுத்துலகப் பயணத்தில் ஓர் சஞ்சிகை ஆசிரியராகப் பணியாற்றக் கிடைத்தது எதிர்பாராமல் நான் அடைந்த ஓர் ஏணிப்படி .அந்த வாய்ப்பொன்று எனக்கு ஏற்படுத்தித் தந்ததையிட்டு இறைவனுக்கு அடுத்ததாக தலைவி மஷூறா அவர்களுக்கு என் மனங்கனிந்த நன்றியை முன் வைக்கிறேன்.

அவரி சஞ்சிகையின் செயற்குழுவில் இயங்கிய என்னை சஞ்சிகையாசிரியராக பணியாற்ற ஆரம்பம் முதல் இறுதி வரை எனக்கு வழிகாட்டியவர் தலைவி மஷூறா.

சஞ்சிகையொன்றை வெளியிடுவது பாரிய சுமையெனினும் உங்களால் முடியும் என்ற அவரது நம்பிக்கை மிக்க உறுதியான வார்த்தையே என்னை இதில் இறங்கவும் இயங்கவும் வைத்தது. அல்ஹம்துலில்லாஹ்.

இறுதியாக சஞ்சிகைக்கு ஆக்கங்களை ஆர்வத்தோடு அனுப்பி பங்களிப்பு செய்த அனைவருக்கும் சஞ்சிகை குழுவினருக்கும் என் அன்பான நன்றிகள்.



# அவரி 15 உள்ளடக்கம்.......


1 எதைப்பின்பற்றுவது...பஸ்லா பர்ஸான்

2 இன்றைய கால கட்டத்தில் ஆசிரிய - மாணவ நல்லுறவு பேணப்படுகிறதா....எஸ். பாயிஸா அலி

3 வாடி நிற்கும் மலரொன்று......மூதூர் சுசானா முனாஸ்

4 கானாமல் போன கனவு.....ஹிஃப்ராஃபாரூக்

5 ரொக்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணங்கள்.....ஜெஸ்மின் றமீஸ்

6 ஏமாற்றம்... பாத்திமா சுமையா

7 பாவைப் பிள்ளை....சம்மாந்துறை மஷூரா

8 குழந்தை வளர்ப்பு......நஸ்மியா நஸ்மி

9 மலர்ந்திடுமா சமாதானம்.... சேகு முஹம்மது பெனாசிரா

10 சிறுவர் பகுதி.....

11 கால மாற்றம்....ஸஞ்ஸீதா முஜிபுர்றஹ்மான்

12 தும்பைச் செய்கை.... முர்ஷிதா ஷிரீன்

13 படித்துச் சுவைத்தது.......எம்.எஸ்.எஸ் கலீமா

14 மொழிபெயர்ப்புக் கவிதை........லைலா அக்ஷியா

15 பாடசாலைக்கு வெளியே..... எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்

16 கால சுழற்சி.....வஃபீராவஃபி

17 தையல் குறிப்பு....சில்மியா ஷாப்தீன்

18 செவ்வி........ ஷாமென் நிஸாம்தீன்- இராணிபௌசியா

19 சுவைக்கலாமா...ஷியாஸ்னா பைசல்

20 சுவைக்கலாமா....பானு ஜிப்ரி

# எதைப் பின்பற்றுவது

வருடத்தில் இருமுறை
வருகின்ற பெருநாள்களில்,
வந்து விடுகின்றன
பற்பல சர்ச்சைகள்.

பாமரர்
மார்க்கத்தைப் படித்தவரைதானே
பின்பற்றுவர்
பாதை சரியென
அதன்படியும் ஒழுகுவர்

பொருத்தமான வழிகாட்டல்கள்
புரிவோரே
இங்கு,
பொறுப்பாக
செயற்பட வேண்டிய நபர்கள்

அபிப்பிராய பேதங்களால் பிளவு பட்டு,
அழகு மார்க்கத்தைக் கூறு போடாது,

சன்மார்க்கத்தின் சத்தியத்தை
சரியாக உரைத்திடும்,
சங்கை மிகுந்தோர்
சொல் ஓங்கட்டும்.

செயலாய் அது மண்ணில் உருவாகட்டும்.
செயற்படும்
மனநிலையை ஏனையோர் ஏற்கட்டும்.

அறியாத தவறு
வழிகாட்டலில் இருந்தால்,
அஃதவனுக்குரிய
வழிபாடு பிழைத்துவிடும்.

அறிந்து இழைப்பின்,
நாளை மறுமையில்
அனைவர் பாவமும்
அவரையே சாரும்.

தகுதி என்பதைச் சரியாய்ப்
பெறுவதே,
தார்மீகமான தலைமைகளின்
தனித்துவப் பண்பு.

சீரிய வழிகாட்டல்களால்,
சிறப்புப் பெறுவது
சிந்தை தெளிந்த யாவரின்
அமல்களுமே.

கருத்து வேறுபாட்டின்
கர்த்தா இப்லீஸே,
கலகம் விளைவிப்பவனும்
கண்டிப்பாய் அவனே.

சிந்தித்துச் செயற்பட்டு,
சிரமேற்கொள்வோம்.
சந்ததிகள் பின்தொடர,
நல்வழி சமைப்போம்.



**பஸ்லா பர்ஸான் - காத்தான்குடி**

# இன்றைய காலகட்டத்தில் ஆசிரிய-மாணவ நல்லுறவு பேணப்படுகிறதா?

எஸ். பாயிஸா அலி



கல்வி என்பது வெறும் தகவல்களை மனப்பாடம் செய்யும் ஒரு செயல்முறை அல்ல அது மாண வர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும், சமூகத் திறன்களுக்கும், எதிர்கால வாழ்விற்கும் அடித்தளமிடும் ஒரு புனித மான பணி. இந்த பணியின் மையத் தில் ஆசிரியர்களும் மாணவர்களும் உள்ளனர். இவர்களுக்கிடையேயான உறவு, ஒரு மாணவரின் கற்றல் அனுப வம், உளவியல் நலம் மற்றும் ஒட்டு மொத்த வளர்ச்சி ஆகியவற்றில் ஆழ மான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பாரம்பரியமாக, ஆசிரியர்-மாணவ உறவு என்பது குருகுலக் கல்வி முறை முதல் நவீன பாடசாலைக் முறை வரை, மதிநுட்பம், மரியாதை மற்றும் வழிகாட்டுதல் ஆகியவற்றின் அடிப்ப டையில் அமைந்திருந்தது. ஆனால், இன்றைய அதிவேக உலகில், தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக மாற்றங் கள், புதிய கல்விக் கொள்கைகள் மற்றும் மாணவர்களின் மனப்பான்மைக ளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை இந்த உறவின் மீது கணிசமான சவால் களை முன்வைக்கின்றன.

## பாரம்பரிய நல்லுறவின் சிறப்பம்சங்கள்:

பண்டைய காலத்தில், ஆசிரியர்-மாணவ உறவு என்பது ஒரு வழிகாட்டியாகவும், தந்தை அல்லது தாயாகவும், நண் பராகவும் ஆசிரி யர் செயல்படும் ஒரு முழுமையான உறவாக இருந்தது. மாணவர்கள் ஆசிரியர்களை உயிருக்கும் மேலாக மதித்து, அவர்களின் அறிவுரைகளை முழுமையாகப் பின்பற்றினர். ஆசிரியர் களும் மாணவர்களின் கல்வியில் மட்டும் அக்கறை கொள்ளாது தனிப்பட்ட பிரச்சினைகளிலும் அக் கறை கொண்டு, அவர்களை வெறும் பாடப்புத்தகம் சார்ந்து அணுகாமல், வாழ்வின் சகல அம்சங்களிலும் வழி காட்டினர். இந்த உறவு, நம்பிக்கை, பாசம், மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றால் ஆனது. இது மாணவர் களின் ஒழுக்க வளர்ச்சிக்கும், சமூக மதிப்பீடுகளைக் கற்றுக்கொள்வதற் கும் மிக அவசியமாக இருந்தது.

நவீன கல்விமுறையானது, பாடசாலை வகுப்பறை, கல்லூரி, வளா கம் என ஒரு கட்டமைக்கப்பட்ட சூழ லில் நடைபெறுகிறது. இங்கு, பாடத் திட்டம் சார்ந்த கற்றல் மற்றும் மதிப் பீடு முதன்மைப்படுத்தப்படுகிறது. உலகமயமாக்கல், டிஜிட்டல் மயமாக் கல், மற்றும் போட்டி நிறைந்த சூழல் ஆகியவை மாணவர்களிடம் கல்வி சார்ந்த அழுத்தத்தை அதிகரிக்கின் றன.

ஆசிரியர்களுக்கும், பாடத்திட்

☞ 02

டத்தை சரியான நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற அழுத்தம், நிர்வாகச் சுமை, மற்றும் நவீன கற்பித்தல் முறைகளை கற்றுக்கொள்ள வேண் டிய தேவை ஆகியவை உள்ளன. இந்த மாற்றங்கள், பாரம்பரிய ஆசிரி யர்-மாணவ உறவின் தன்மையை கணிசமாக மாற்றியுள்ளன.

இன்றைய காலகட்டத்தில் ஆசிரிய-மாணவ நல்லுறவு என்பது ஒரு பன்முகத்தன்மை கொண்டதாக உள்ளது. சில இடங்களில், பாரம்பரிய உறவின் ஆழம் இன்னமும் பேணப்படு கிறது. ஆசிரியர்கள் தங்கள் மாணவர் களின் தனிப்பட்ட பிரச்சினைகளைக் கேட்டு அறிந்து, அவர்களுக்கு மன மார்ந்த ஆதரவை வழங்குகின்றனர். அத்தகைய சூழல்களில், மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களை நம்பி, தங்கள் சந்தேகங்களையும், கவலைகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். இதன் விளைவாக, மாணவர்கள் சிறந்த கல்விச் செயல்திறனை வெளிப்படுத் துவதுடன், மன ரீதியாகவும் ஆரோக் கியமாக இருக்கின்றனர்.

ஆனால், பல இடங்களில், இந்த உறவு ஒரு சம்பிரதாயமான ஒன் றாக மாறிவிட்டது. வகுப்பறைக்கு வெளியே ஆசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் இடையே மிகக் குறைவான தொடர்பே உள்ளது. தொழில்நுட்பத் தின் வளர்ச்சி ஒருபுறம் கற்றலை எளி தாக்கினாலும், மறுபுறம் தனிப்பட்ட தொடர்புகளைக் குறைத்துள்ளது.

சமூக ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் வாயிலாக மாண வர்கள் தகவல் பரிமாற்றம் செய்து கொண்டாலும், இது ஒரு நேரடி, உணர்வுபூர்வமான உறவுக்கு மாற்றாக அமையவில்லை என்பதைக் குறிப் பிட்டே ஆக வேண்டும்.

மேலும், ஒரு வகுப்பறையில் அதிக எண்ணிக்கையிலான மாணவர் கள் இருக்கும்போது, ஒவ்வொரு மாண வருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத் துவது ஆசிரியர்களுக்கு கடினமாகி றது.

அத்துடன், மதிப்பெண்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கும் கல்விமுறையாக இன்றைய நவீன கல்வி முறை காணப் படுவதால் மாணவர்களிடையே போட்டியையும், ஆசிரியர்களிடம் இருந்து பாடத்திட் டத்தை முடிக்கும் அழுத்தத்தையும் உருவாக்குகிறது.

இது தனிப்பட்ட வழிகாட்டுத லுக்கு உள்ள இடத்தைக் குறைக்கி றது.

தொழில்நுட்பத்தின் மாணவர் கள் அதிக நேரம் டிஜிட்டல் திரைக ளில் செலவிடுவதால், நேரடி சமூக தொடர்புகள் குறைகின்றன. ஆசிரியர் கள் மற்றும் மாணவர்களுக்கிடையே யான உரையாடல்கள் பெரும்பாலும் டிஜிட்டல் வழியே நடைபெறுகின்றன. மேலும், ஆசிரியர்களின் பணிச்சுமை அதிகரிக்கப் படுகிறது. ஆசிரியர்கள், கற்பித்தல் பணி மட்டுமின்றி, நிர்வாகப் பணிகள், தேர்வு தொடர்பான பணிகள், மற்றும் துணைப்பாடத்திட்ட செயல் பாடுகள் எனப் பல சுமைகளைச் சுமக்கின்றனர். இது மாணவர்களுடன் தரமான நேரத்தைச் செலவிடுவதற் கான வாய்ப்பைக் குறைக்கிறது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் அதிக மதிப்பெண்கள் பெற வேண்டும் என்று எதிர்பார்ப்பது, ஆசிரியர்களுக்கு மேலும் அழுத்தத்தை உருவாக்குகிறது.

மாணவர்களின் மனப்பான்மை: இன்றைய தலைமுறை மாணவர்கள், முந்தைய தலைமுறையினரை விட சுதந்திரமாகவும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும் விரும்புகின்றனர். இது சில நேரங்களில் ஆசிரியர்களுக்கு சவாலாக அமையலாம். அத்துடன் பாதுகாப்பு பிரச்சினைகள் அதிகம் காணப் படுகிறது.நவீன உலகில், ஆசிரியர்-மாணவ உறவில் பாதுகாப்பு தொடர்பான அம்சங்கள் (உதாரணமாக, மாணவர் பாதுகாப்பு, ஆசிரியர் மீதான சட்ட சிக்கல்கள்) மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளன. இது சில சமயங்களில் ஆசிரியர்கள் மாணவர்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழக தயக்கம் காட்டுவதற்கு வழி வகுக்கும்.

## நல்லுறவை மேம்படுத்துவதற்கான வழிகள்:

திறந்த மற்றும் வெளிப்படையான தகவல் தொடர்பு: ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருவருக்கொருவர் திறந்த மனதுடன் பேச வேண்டும். மாணவர்கள் தங்கள் சந்தேகங்களையும், பிரச்சனைகளையும் தயங்காமல் கேட்கும் சூழலை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட திறமைகளையும், தேவைகளையும் ஆசிரியர்கள் கண்டறிந்து, அதற்கேற்ப வழிகாட்ட வேண்டும். மாணவர்களின் சிறிய வெற்றிகளையும் ஆசிரியர்கள் பாராட்ட வேண்டும். இது மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும். அத்துடன் மாணவர்களின் உளவியல் ஆரோக்கியத்திற்கு ஆசிரியர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேவைப்பட்டால், பள்ளி உளவியல் ஆலோசகர்களின் உதவியை நாடலாம்.

## இயலில் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகள்:

விளையாட்டு, கலை, இலக்கியம் போன்ற கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பங்கேற்பது, அவர்களின் உறவை வலுப்படுத்தும்.

தொழில்நுட்பத்தை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துதல்: ஆன்லைன் கற்றல் தளங்கள், விவாதம் குழுக்கள் போன்றவற்றை பயன்படுத்தி, கற்றல் சார்ந்த சந்தேகங்களை தெளிவுபடுத்தலாம். ஆனால், நேரடி தொடர்புக்கு மாற்றாக அமையக்கூடாது.

ஆசிரியர்களுக்கு ஆதரவு: ஆசிரியர்களுக்கு பணிச்சுமையைக் குறைத்து, அவர்களின் மேம்பாட்டிற்கான பயிற்சிகளை வழங்குவது, அவர்கள் மாணவர்களுடன் தரமான நேரத்தைச் செலவிட உதவும்.

## பெற்றோர்-ஆசிரியர் சந்திப்புகள்:

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இடையே தொடர்ச்சியான உரையாடல்கள், மாணவர்களின் தேவைகளைப் புரிந்து கொள்ள உதவும்.



☞ 04

ஆசிரியர்களுக்கு உளவியல் பயிற்சிகள்:

இன்றைய மாணவர்களின் மன நிலையைப் புரிந்துகொள்ளவும், உணர்வுபூர்வமாக அவர்களை அணுக வும் ஆசிரியர்களுக்கு உளவியல் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

ஆசிரிய-மாணவ நல்லுறவு என்பது ஒரு ஆரோக்கியமான கற்றல் சூழலுக்கு இன்றியமையாதது. இன்றைய சவால்களுக்கு மத்தியில் இந்த உறவைப் பேணுவது ஒரு கூட்டுப் பொறுப்பு. ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் கல்வி நிர்வா கத்தினர் என அனைவரும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே, ஒரு வலுவான, பரஸ்பர மரியாதை கொண்ட ஆசிரியர்-மாணவ நல்லுறவை உருவாக்க முடியும். இந்த உறவு, மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மட்டும் அன்றி, அவர்களின் சமூக, மன, மற்றும் உணர்வுபூர்வமான வளர்ச்சியையும் உறுதி செய்யும். இதுவே எதிர் கால தலைமுறை ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க அடித்தளமிடும். இன்றைய தொழில்நுட்ப உலகில், மனித உறவுகளின் முக்கியத்துவத்தை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. ஆசிரிய-மாணவ நல்லுறவு என்பது வெறும் தகவல்களைக் கடத்துவது அல்ல் அது தலைமுறை தலைமுறையாக அறிவையும், அறத்தையும், மனித நேயத்தையும் கடத்தும் ஒரு தொன்மையான மரபு. இதை பேணிக்காப்பது நம் அனைவரின் கடமையாகும்.

# படித்து தெரிந்து கொண்டது.

10 வயது மாணவர் மாரடைப்பால் இறந்து போனதற்கு வைத்தியர் கூறிய காரணம்.

1) காலையில் குழந்தையை எழுப்புவது. (தூக்கம் நிறைவேறாமல்)

2) காலை உணவு இல்லாமல் பாடசாலைகளுக்கு அனுப்புதல்.

3) குழந்தையின் எடையை விட பள்ளி புத்தக பையை எடுத்து செல்லுதல்.

4) வீட்டு வேலைகளை(Homework) முடிக்க வேண்டும் என்ற ஆசிரியர்களின் அழுத்தம்.

5) குளிர்பானம் குளிர் பக்கட் சாப்பிடுவது.

6) பாடசாலை விட்டு வந்து உடனே குளிப்பது, சாப்பிடுவது.

7) வீட்டில் வீட்டு வேலைகளை முடிக்க அழுத்தம் கொடுப்பது அல்லது அவர்களை அதிகமான நேரம் திட்டிய வண்ணம் இருப்பது.

நாம் குழந்தைகளின் குழந்தைப்பருவத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அவர்களின் உணர்வுகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்புள்ள பெற்றோர்களே! அப்பாவி குழந்தைகள் மீது கருணை காட்டுங்கள் விளையாடுவதற்கு ஓய்வெடுக்க போதுமான நேரம் கொடுங்கள்.

# வாடி நிற்கும் மலரொன்று ......



மூதூர் சுஹானா முனாஸ்

சிறுகதை

அந்தப் பேருந்து காற்றைக் கிழித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. நாடளாவிய ரீதியிலான ஒரு பெண்கள் அமைப்பின் நிர்வாகக் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன் . அறுபது வயதினைப் பூர்த்தி செய்து விட்டிருந்த எனக்கு பேருந்துப் பயணம் சற்றே கடினமாகத்தான் இருந்தாலும் அதனை ஒதுக்கி, பிதுங்கி வழியும் மனிதக் கூட்டத்துள் நுழைந்து, சில பல போராட்டகளின் பின் ஜன்னலோர இருக்கை கிடைத்து விட்ட திருப்தியில் சற்றே ஆசுவாசமாக மூச்சு விட்டுக்கொண்டு வெளியே விரையும் மரங்களை இலக்கின்றி பார்த்துக் கொண்டிருந்தேன். மாலை மயங்கும் நேரம் .... மெலிதான மழைத் தூறல் சூழலை அழகாக்கி இருந்தது. திறந்திருந்த ஜன்னலினூடே முகத்தில் மோதிய காற்றுடன் அடித்த சாரலும் ரசிக்க வைத்தது. பேருந்தின் அதிகபட்ச வேகம் மனதை சற்றே உலுக்கி ரசனையை சற்றே குறைத்துவிடத்தான் செய்திருந்தது. கேட்கும், பார்க்கும் விபத்து செய்திகள் அப்படிப்பட்டவை. என்றாலும் நமது கைமீறிய செயல்களை நம்மால் கட்டுப்படுத்தி விடவும் முடியாதில்லயா... கண்களை ஒரு முறை மூடி இறைவனை வேண்டுவதைத் தவிர... ஆடு மாடுகளை நிறைப்பது போல் மனிதர்களை அந்த வண்டிக்குள் நிறைத்துக் கொண்டிருந்தான் அந்த வண்டியின் நடாத்துனர். நெருக்கியடித்துக் கொண்டு மூச்சு விடவும் சிரமப் பட்டுக் கொண்டு நிற்பவர்களைப் பார்த்தபோது இத்தனை பேரை நிறைக்க வேண்டியதன் அவசியம் தான் என்ன என்ற அலுப்பேற்பட்டது.

அந்தக் கூட்டத்தை பார்த்து மனதில் ஏற்படும் அலுப்பை விட, வெளியே விரையும் மரங்களையும், மெலிதான மழைத்தூறலையும் ரசிப்பது சிறப்பாகவும், ரசனைமிக்கதாகவும் தோன்ற பார்வையை உள்ளே திருப்பவில்லை நான் .

எனக்கருகில் என் வயதொத்த ஒரு பெண்மணி தனது எட்டு வயது மதிக்கத்தக்க பேத்தியை மடியில் வைத்தபடி அமர்ந்திருந்தார். அவருக்கருகில் அதே வயது மதிக்கத்தக்க ஒரு பெண் குழந்தையும் அமர்ந்திருந்ததை ஆரம்பத்தில் கவனித்திருந்தேன். அந்தக் குழந்தை மெலிந்திருந்தாள். அவள் முகத்தில் குழந்தைக்கேயுரிய துறுதுறுப்பின்றி அமைதி குடி கொண்டிருந்தது. பார்வை வெளியே இருந்தாலும், அதில் ஒரு வித வெறுமையும், சோகமும் தங்கியிருந்ததை நான் அவதானித்தேன். ஆனாலும் இந்தக் குழந்

தைக்கு இந்த வயதில் அப்படியென்ன சோகம் இருந்து விடப் போகிறது.... பட்டாம்பூச்சியாய் சிறகடிக்கும் பருவமாயிற்றே இது... ஒரு வேளை இயல்பிலேயே அமைதியான பெண்ணாய் இருப்பாளோ" என்று எண்ணிக் கொண்டேன். ஏனென்றால் அந்தப் பெண்மணியின் மடியிலிருந்த குழந்தையோ ஏதாவது ஒன்றை துறுதுறுவென்று செய்து கொண்டும் பேசிக் கொண்டுமே இருந்ததும் என் கவனத்தில் விழத் தவறவில்லை. அமைதியான அந்தக் குழந்தையின் தகப்பனும், அந்தப் பெண்ணின் கணவரும் கம்பியை இறுகப் பற்றியபடி அருகிலேயே நின்றிருந்தார்கள். நீண்ட தூரப் பயணம் ... இரண்டு மணித்தியாலங்கள் பயணப்பட வேண்டியிருந்தது. பெரும்பாலும் நான் பேரூந்தில் பயணப்படுவதில்லை. அவசியப்படும் பயணங்களின் போதும் சலசலக்கும் இயல்பற்றவள் என்பதனால் அருகில் இருக்கும் தெரியாதவர்களுடன் பேசுவதை எப்போதும் தவிர்த்துக் கொள்வேன்.... சிறிய அறிமுகச் சிரிப்புடன் நானும் என்பாடும் என்றிருந்து விடுவேன்.

ஆனால் பல பேர் அப்படியில்லை.. தெரியாதவர்களுடன் கூட சட்டென நட்பு பாராட்டக் கூடியவர்கள் சிறு புன்னகைப் பரிமாற்றமே அவர்களுக்குள் நட்பை உருவாக்கி விடப் போதுமானது. அது தவறும் இல்லை... வெகு இயல்பானவர்களால் தான் அப்படி கலந்து உறவாடவும் முடியும்... அப்படிப்பட்ட இருவர் தான் அந்தக் குழந்தையின் தந்தையும், அந்தப் பெண்ணின் கணவரும் போலும். இருவருமே விரைந்து தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டு பேசத் தொடங்கி விட்டிருந்தனர். அலற விடப்பட்டிருந்த பேரூந்து வானொலிப்பெட்டியின் சத்தத்தையும் தாண்டி அவர்களின் பேச்சு என் காதுகளில் விழத்தான் செய்தது. முதலில் அசுவாரஸியமாக அதில் கவனம் செலுத்திய நான் அவர்கள் பேச்சுப் போன விதத்தில் ஆழ்ந்து கவனிக்க ஆரம்பித்தேன்.

அந்த பத்து வயதுக் குழந்தை பற்றித்தான் அதன் தந்தை விபரித்துக் கொண்டிருந்தார்.

"ரொம்பப் பொறுப்பான பிள்ளைங்க.... எனக்கு ரொட்டியெல்லாம் கூட சுட்டுத் தருவான்னா பார்த்துக் குங்களேன்..." என்ற போது எனக்குள் துணுக்கென்றிருந்தது.

"என்ன இந்தப் பிள்ளையா...." எனக்குள் தோன்றிய அதே கேள்வியை பக்கத்தில் இருந்த பெண்மணியின் கணவர் ஆச்சரியத்துடன் கேட்டார்..

"ஆமாங்க... வீட்டு வேலையும் நல்லாச் செய்வா..." என்றார் அந்த தந்தை பெருமை குரலில் தொனிக்க..

"அப்போ இவட தாய்....?" எனது மனதின் கேள்விகளை பெண்மணியின் கணவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அதையேன் கேட்கிறீங்க.... இந்தப் பிள்ளையிட தாய் இவட ரெண்டு வயசிலேயே வேறு ஒருத்தன் கூட போய் கல்யாணம் கட்டிட்டாவே... பிள்ளையையும் வேணாண்டு சொல்லிட்டா பாருங்க....." பொது இடமென்றும் பாராமல் அந்தத் தந்தை வெளிபடையாக, புதிதாக அறிமுகமானவரு

டன் தன் அந்தரங்கத்தை பகிர்ந்து கொண்டதில் அதிர்ந்து போய் சட்டெனத் திரும்பிப் பார்த்தேன். அருகிலிருந்த பலரும் ஏக காலத்தில் அவரைத் திரும்பிப் பார்த்தாலும், அவர் அதனைப் பொருட்படுத்தாமல்

"கல்யாணம் கட்டும் போதே தொடர்பு இருந்திருக்கும் போல..." என்று மேலே பேசிக்கொண்டு போனார். என் பார்வை என்னையறியாமல் அந்தக் குழந்தையில் நிலைத்தது. அந்த முகத்திலும், அதன் விழிகளிலும் தெரிந்த வெறுமைக்கும், சோகத்துக்குமான காரணம் புரிபட்டதில் உள்ளத்தில் முணுக்கென ஒரு வலி தோன்றிற்று. இப்படி பொதுவெளியில் பேசும் தந்தை வீட்டிலும் இதையே சொல்லி, இதைக்கேட்க நேர்ந்த குழந்தைக்கு ஏற்பட்ட பாதிப்பின் பிரதிபலிப்புதானோ இந்த அமைதி... ஒரே வயதிலுள்ள இரண்டு குழந்தைகளின் இயல்பு மாற்றங்களுக்கு அவர்களது குடும்பச் சூழலும் காரணமாய் அமைந்திருக்கும் என்கிற நிஜம் சுட்டது. அவர்கள் பேச்சு தொடர்ந்தது.

"நீங்க வேற கல்யாணம் பண்ணிக்கலயோ..."

"எப்படிங்க பன்றது.... இந்தக் குழந்தைய வச்சுகிட்டு...எனக்கு நாற்பத்து மூன்று வயசாச்சு. யாரு பண்ணிக்குவாங்க...." வலி நிறைந்த புன்னகை அவர் முகத்திலே..

பார்வையை வெளியே திருப்பிக் கொண்ட எனக்கு வெளியே தெரிந்த இயற்கையழகு இரசிக்கவில்லை. அந்தக் குழந்தையே மனதில் நிறைந்திருந்தாள். அவர்களுக்குள் என்ன பிரச்சினையோ ...யார் பிழை யார் சரி என்பதைத் தாண்டி அந்தக் குழந்தையின் நிலை... தாயற்று தந்தையுடன் தனித்து வாழ வேண்டிய அந்த நிலை அந்தக் குழந்தையில் ஏற்படுத்தும் வலி எத்தனை பெரிது. அதுவாக விரும்பிப் பிறக்கவில்லையே.. அந்தக் குழந்தை என்ன தப்பு செய்தது ... தங்கள் இளமையின் வேகத்தில் ஒரு குழந்தையை உருவாக்கி விட்டு அதனைத் தூக்கி எறிந்து விட அந்தத்தாய்க்கு எப்படி முடிந்தது...... இன்னொருவனைத் தேடிப் போகும் நிலையை யார் உருவாக்கி இருந்தாலும் கூட அது அந்தக் குழந்தையின் வலிக்கு காரணமாகிப் போனதே... இன்னொருவருடன் தொடர்பு இருக்கும் போது எப்படி இந்தக் குழந்தை உருவாக அந்தப் பெண் அனுமதித்தாள்... எப்படி விட்டுப் போனாள்... ஏகப்பட்ட விடை தெரியாக் கேள்விகள் எனக்குள் உருவாகிற்று. அது அவர்கள் விடயம்... எனக்கென்ன என்று கடந்து போக முடியாமல் அந்தக் குழந்தையின் முகம் தடுத்தது. வளரும் போது தன்னை தாய் வேண்டாம் என்று போய்விட்டாள் என்பது அதற்கு எத்தனை பெரிய அவமானத்தையும், வலியையும் உண்டு பண்ணி விடும் என்பதை எண்ணிய போது முணுக் முணுக்கென உண்டான வலியை நிறுத்த இயலவில்லை. உங்களுக்குள் ஒத்துப் போகாது என்பது புரிகிற பட்சத்தில் ஒரு குழந்தையின் உருவாக்கத்தையாவது தள்ளிப் போடலாமே என்று தோன்றிற்று. காரணமே இல்லாமல் ஒரு குழந்தை அனுபவிக்கும் வேதனையையாவது தடுக்கலாமே... தந்தை இல்லாவிட்டாலும்

தாயினால் ஒரு பிள்ளையை சிறப்பா கவே வளர்த்து விட முடியும்... ஆனால் தந்தையால் வளர்க்கப்படும் அந்தக் குழந்தை அதிலும் பெண் குழந்தை .... எண்ணிய மாத்திரத்தில் என் கண்கள் கலங்கிப் போயிற்று. ஒரு விதத்தில் அந்தத் தந்தையை மனதுக்குள் மெச் சத்தான் தோன்றிற்று. அந்தக் குழந் தையை தூக்கி எறிந்து விடாமல் மாற்றாந்தாய் கொடுமையையும் அனுப விக்க விடாமல் தாயுமானவனாய் காக் கிறானே... என்கிற திருப்தி மனதுள் நிறைந்தது. அவனது இயலாமை யையோ, வருத்தத்தையோ இப்படிப் பேசித்தீர்த்தாலும் குழந்தையை கைவி டாமல் காப்பாற்றுவதிலே அவன் பொறுப்பை சரிவர கவனிக்கிறானே என்பதை மனது மெச்சிற்று. எது எப் படி இருப்பினும் தங்கள் சுயலாபத்துக் காகவும், உணர்ச்சி வேகத்திலும் பெரி யவர்கள் செய்யும் செயல்களால் ஒன் றுமறியாப் பிஞ்சுகள் வாடிய மலர்களா கிப்போவது மனதைப் பிழிந்தது.. ரொம்ப நாளைக்கு அந்தக் குழந்தை முகம் மனதை விட்டு அகலாது என்பது புரிந்தது.

# காணாமல் போன கனவு




*ஹிஃப்ரா ஃபாரூக்*
*நாச்சியாதீவு*


வெளிச்சம் தீண்டாத இருளில்
வாழ்க்கையை சுவாசித்துக் கொள்ள
கைநிறைய கல்வியோடும்
விற்பனையற்ற ஓவியமாய் நிற்கிறாள்

பட்டம் தொங்கும் சுவற்றில்,
கனவுகள் கூடவே தொங்குதே!
"வேலை" என்ற ஒற்றை வார்த்தை
அவளுக்குள் தினம் தினம் போராட்டம்

குடும்பத்தின்
பொருளாதார சிக்கல்
தாயின் வரையறை மீறும் கண்ணீர்
தந்தையின் சிந்தையில்
நுழையும் சலிப்பு

மாமியாரின் கேலிச்சித்திரம்
கணவனின் குன்றிய மதிப்பும்
அவளது உள்ளத்தை
தினம் தினம் உருக்குகிறது

போற்றிய பட்டம்
இப்போது-பாரமாய்
பொன் விழாக்கள் இப்போது
வேதனையை போக்கிட முடியாத
கனவுகளோடு
போராடிக் கொண்டிருக்கிறது
அவள் மனக்குமுறல்

# றொக்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணங்கள்

அலசல் – 3
சமூகச் சித்திரம்

ஜெஸ்மின் றமீஸ்.
காத்தான்குடி



ஜெஸீமா: சிமாயா.... சிமாயா.... அஸ்ஸலாமு அலைக்கும்

சிமாயா: வஅலைக்குமுஸ்ஸலாம் ஜெஸீமா. வா... வா.... என்ன பெரிய அதிசயமா இருக்கு எங்கட வீட்டு பக்கம் எல்லாம் வாறதுக்கு உனக்கு டைம் இருக்கா?

ஜெஸீமா: ஓ.... கொஞ்சம் பிஸி தான்.

சிமாயா: சரி சரி புறகு எப்புடி வீட்ட எல்லாரும் சுகமா இருக்காகளா?

ஜெஸீமா: ஓ... எல்லாரும் நல்ல சுகம்

சிமாயா: அப்புடியா அல்ஹம் துலில்லாஹ்.... உன்ட தங்கச்சிட மகள் எப்புடி சுகமா இருக்கா வா? கல்யாணம் முடிஞ்சு ஒரு மூணு மாசம் இருக்கும் என்ன? நானும் ப்ரெசென்ட் பண்ண வரணும் வரணும் என்று நினச் சிக்கொண்டுதான் இருக்கன். எங்க... நேரம் இல்லாம இருக்கு. இன்ஷா அல் லாஹ் இந்த வீக் எப்படியும் வருவன். அது சரி இந்த மத்தியானம் வேகாத வெயிலுக்க எங்க போயிட்டு வாறா நீ?

ஜெஸீமா: நான் காதிக் கோட்டுக்கு போயிட்டு வாறன்.

சிமாயா: என்ன காதிக்கோட்டுக்கா? ஏன் என்ன பிரச்சின? யாருட கல்யா ணம் பிரச்சின?

ஜெஸீமா: எல்லாம் தங்கச்சிட மகள்ட கல்யாணம்தான்.

சிமாயா: அல்லாஹ்....

என்ன இது கல்யாணம் முடிஞ்சு மூணு மாசம்தானே ஆகுது. அதுக்குள்ள பிரச்சின வந்து காதிக்கோடு வரைக் கும் போயிட்டா? ஏன் என்ன நடந்த?

ஜெஸீமா: அதை ஏன் கேட்கிறா? எவ் வளவு சீரும் சிறப்புமா செல்வத்துல நடந்த கல்யாணம் அது? இப்ப சின்னா பின்னமாகி சிதஞ்சி கிடக்கு.

சிமாயா: நானும் கல்யாணத்துக்கு வந் திருந்தன் தானே எவ்வளவு பெரிசா நடந்த கல்யாணம் அது,,? வெடிங் ஹோல் என்ன? கூறைகள் என்ன? சீரு கள் என்ன? செப்புகள் என்ன? நானே ஆச்சரியப்பட்டு போனன். ரொம்பவும் ஆடம்பரமா நடந்த கல்யாணமாச்சே அது?

ஜெஸீமா: ஓ... சிமாயா தங்கச்சிக்கு ஒரே ஒரு பொம்புளப் புள்ள சொத் துப்பத்துக்கா குறைச்சல்? மாடி வீடு உடுபுடவ நகநட்டு பண்ட பாத்திரம் எல்லாமே கொடுத்து தானே முடிச்சம்.

சிமாயா: அதானே.... மாப்பிள்ள வேற பெரிய பணக்கார வீட்டு பொடியன் தானே... புறகு என்ன பிரச்சின காசு பணத்துக்கா பஞ்சம்?

ஜெஸீமா: காசு பணத்தால தான் பிரச் சினயே... மாப்பிள்ள பெரிய பணக் காரன். பணக்காரன் ஒருத்தன் தன்ட மருமகனா வந்தாத்தான் இருக்கிற சொத்துப்பத்து எல்லாத்தையும் காப் பாத்துவான் என்று நினச்சி தங்கச்சி தப்புக் கணக்கு போட்டு கல்யாணத்த முடிச்சி வெச்சா. அங்க பணத்துக்கு ஒரு குறையும் இல்ல. அது கூடிப் போனதால தான் பிரச்சின.

சிமாயா: அப்புடி என்ன பிரச்சின?

ஜெஸீமா: அத ஏன் கேக்கிறா? அந்த மாப்பிள்ளைக்கு பகலெல்லாம் இரவு... இரவெல்லாம் பகல்....

சிமாயா: எனக்கு புரியல நீ என்ன சொல்றா?

ஜெஸீமா: அது சிமாயா இந்தக் காலத்து புள்ளைகளுக்கெல்லாம் புதுப்பழக்கம் ஒன்டு இருக்கே... இர வைக்கெல்லாம் கூட்டாளி மாரோட சேர்ந்து ஊர் சுத்துறது... அது இது பாவிக்கிறது... நடுச் சாமத்துல மோட் டார் பைக் ரேஸ் வைக்கிறது...

சிமாயா: என்ன இதெல்லாம்? அந்த மாப்பிள்ள நல்ல புள்ள எண்டு தானே எல்லாரும் சொன்னாங்க.

ஜெஸீமா: நல்ல புள்ளையா? வெளிய பார்க்கத்தான் வெள்ளையும் சொள் ளையுமா இருக்கானுகள். உள்ளுக் குள்ள எல்லாரும் இப்புடித்தான் ஒவ்வொ வாரு மாதிரி இருக்கானுகள்.

சிமாயா : ஆ.....

ஜெஸீமா: ஓ...சிமாயா இரவெல்லாம் போதைய பாவிச்சுக்கிட்டு கூட்டாளி மாரோட ஊர் சுத்திக்கிட்டு பைக் ரேஸ் ஓடிக்கிட்டு திரியிற. காலையில சுபுஹு நேரம் வீட்ட வந்து தூங்குற. பக லைக்கெல்லாம் தூக்கம் தான்... தொழில்துறைக்கெல்லாம் போறயும் இல்ல.

சிமாயா: அப்ப செலவுப் பாடெல்லாம் எப்படி?

ஜெஸீமா: அது குடுக்கத்தான் வாப்பா இருக்காரே... பிசினஸ் ஓடிட்டு இருக்கு. காசு கொட்டிட்டு இருக்கு.

சிமாயா: அவங்கட வீட்டுல இது சம் பந்தமா நீங்க ஏதாவது பேசினீங்களா?

ஜெஸீமா: ஓ... பேசினோம். முதல் தடவ பிரச்சின வந்தபோது தங்கச்சிட மகள் இந்த கல்யாணம் வாணா என்டு சொல்லிட்டா. ஒரு மாதிரியா ரெண்டு குடும்பத்தாரும் சேர்ந்து சமாதானம் செஞ்சி புத்திமதி சொல்லி சேர்த்து வெச்சோம். ரெண்டு நாள் ஒழுங்கா இருந்தாரு மூணாவது நாள் திருப்பி பழையபடி அவர்ட பழக்கத்த ஆரம் பிச்சுட்டாரு.

சிமாயா: இவர்ட பழக்க வழக்கம் பத்தி கல்யாணத்துக்கு முதல்ல அவங்கட வீட்ட தெரியுமா?

ஜெஸீமா: ஓ... தெரியும். தெரிஞ்சுதான் கல்யாணம் செஞ்சு வெச்சிருக்காக. கல்யாணம் முடிஞ்சா திருந்திடுவாரு என்டு நினச்சாகளாம்.

சிமாயா: என்ன அநியாயம் இது?

ஜெஸீமா: அநியாயம் தான்.... அதை விட பெரிய கஷ்டம் என்ன தெரியுமா? தங்கச்சிட மகள் இப்ப கர்ப்பமா இருக் கிறா... ரெண்டு மாசம் ஆகுது.

சிமாயா: அல்லாஹ் என்ன சோதன இது?

ஜெஸீமா: நான் அப்பவே தங்கச்சி கிட்ட சொன்னன் நம்ம கிட்ட காசு பணத்துக்கா குறைச்சல் பணக்கார இடமெல்லாம் வாணா. நல்லா படிச்ச ஏழை ஒருத்தர பாப்போம் என்டு. அவ என்ட கதைய கேட்கல்ல. எங்கட பக்கத்து வீட்டுப் பொடியன் யூனிவர்சிட்டியில படிச்சிட்டு இருக்காரு. நல்ல சாலிஹான புள்ள. அஞ்சி வக்து தொழுகைய தவறவிட மாட்டாரு. எந்தவிதமான கெட்ட பழக்க வழக்கமும் இல்ல. அவர தங்கச்சிட மகளுக்கு பேசி முடிப்போம் என்டு நான் சொன்னன். தங்கச்சி என்ட கதைய கேட்கல்ல. எங்க பணம் பணத்தோட தானே சேரும். ம்....

சிமாயா: இப்ப இந்த பிரச்சனைக்கு என்ன தான் முடிவு?

ஜெஸீமா: பஸ்ஃஹு செய்யப் போறோம். காதிக் கோட்டுல வழக்கு வச்சிருக்கம்.

சிமாயா: அப்ப பிறக்கப் போற புள்ளட நிலைம என்ன? தகப்பன் இல்லாம வளரப் போகுதா?

ஜெஸீமா: இப்புடி ஒரு தகப்பன் இருக்கிறத விட இல்லாம இருக்கலாம்.

சிமாயா: அதுவும் சரிதான். அந்தக் காலத்துல திருமணங்கள் சொர்க்கத்தில நிச்சயிக்கப்படுது என்டு சொல்லுவாங்க. ஆனா இந்தக் காலத்தில திருமணங்கள் ரொக்கத்தில தான் நிச்சயிக்கப்படுது. ரொம்ப வேதனையா இருக்கு.

ஜெஸீமா: ம்...ரொக்கத்தில நிச்சயிக்கப்படுற திருமணங்கள் எல்லாம் காதிக் கோட்டுப் படிகள்ளதான் நிக்குது. தங்கச்சி மகள நினச்சா கவலையாத் தான் இருக்குது என்ன செய்ய எல்லாம் அல்லாஹ்ட நாட்டம்.

சிமாயா: எல்லாம் அல்லாஹ்ட நாட்டப்படி தான் நடக்கும் அப்புடின்டு சொல்லிட்டு நழுவிட முடியாது ஜெஸீமா. நாம நினச்சா நம்முட பிள்ளைகள்ட வாழ்க்கையில மாற்றத்த கொண்டு வர முடியும். எனக்கு மூணு ஆம்பள பிள்ளைகள். என்ட மூணாவது மகனுக்கு ஒரு பெண் பாத்து வச்சிருக்கன். வசதி இல்லாத ஏழைக் குடும்பத்த சேர்ந்த பிள்ள. அந்த பிள்ளைய உடுத்த உடுப்போட எங்க வீட்டோடையே கொண்டு வர இருக்கன். நம்ம கிட்ட இருக்கிற வசதிய வெச்சு அடுத்தவங்கள வாழ வெப்போமே.

ஜெஸீமா: அப்புடியா? அல்ஹம்துலில்லாஹ்.

சிமாயா: ஓ... ஜெஸீமா மாற்றங்கள நாம தான் கொண்டு வரணும். அடுத்தவங்களுக்கு எடுத்துக்காட்டா இருக்கணும். ரொக்கத்த தவிர்த்தா சொர்க்கம் தானா தேடி வரும்.

ஜெஸீமா: நீ சொல்றது நூத்துக்கு நூறு சரி. அப்ப நேரம் ஆகுது நான் போயிட்டு வாறன்.

சிமாயா: அல்லாஹ்ட காவல் போயிட்டு வா.

# ஏமாற்றம்.

வகையாய் நானும்
சமைத்து வைத்தேன்
வரும் வரையில் காத்து நின்றேன்

கல்வி கற்க சென்ற மகள்,
கண்மணி போல காத்து அவள்,

வீட்டை நோக்கி வரவே இல்லை
வெந்தே நானும் போனேன் இங்கே

நேரம் கூட ஓடி சென்றது
நெஞ்சில் பயமும் கூடி வந்தது

வகுப்பு சென்ற எங்கள் பிள்ளை,
வாசலை இன்னும் அடையவே
இல்லை

என் இரத்தம் எல்லாம் தண்ணிர்
ஆச்சு,
என் இதயம் கூட நின்னே போச்சு

கூடவே போன பிள்ளைகள் யாரும்,
கூட்டி வந்து இருக்கோ என்று,

எட்டி நானும் பார்த்து வாரேன்,
என்று கொஞ்சம் நடந்து போறேன்

அங்கே அவர்கள் வீட்டில் தூக்கம்,
அவளை காணல என் நெஞ்சில்
ஏக்கம்

மெதுவாய் எழுப்பி நானுமே
கேட்டேன்,
மபாஸா எங்க வீட்டுக்கு வரல?

அவளோ இன்று வகுப்பு வரவில்லை
ஆசிரியை கூட கேட்டு நின்றார்

சொன்னது கூட படிச்ச பாத்திமா,
சுருண்டு விழுந்தேன் மபாசா உம்மா,

அல்லா எங்க எண்ட புள்ள,
ஐயோ நானும் என்ன செய்ய,

அழ வேண்டாம் தாத்தா புள்ள
மோசம்,
அவனோடு போனாள் தூர தேசம்,

அகமதுட மகன் ஹம்பல் கூட,
அதுக்குத்தான் இப்ப போனும்
இருக்கு

ஆண்டவன் அவளை,.'. பார்த்து
கொள்ளட்டும்
அழாம நீங்களும் வீட்ட போங்க
ஆறுதல் கூறி அனுப்பினாள்
அவளும்,
காலம்போற போக்கைப் பார்த்தால்,
பிள்ளை வளர்ப்பு சவாலாய்ப் போச்சு.



பாத்திமா சுமையா
நாரம்மல

# பாவைப் பிள்ளை.

## சிறுகதை

சம்மாந்துறை மஷூறா
மருதமுனை.



நேரத்திற்கு எழும்பியிருந்தாலும் பாடசாலை செல்வதில் ஆர்வம் காட்டவில்லை சுஹூதா. உம்மாவின் கட்டளைகளை அலட்சியம் செய்து கொண்டிருந்தாள்.

சுஹூதா... நான் சொல்றது வெளங்கலியா... கைகால் முகம் கழுவிட்டு வந்து தேய்லயக் குடிச்சிற்று பள்ளிக்குடத்துக்கு வெளிக்கிடு....

உம்மா சத்தமிட்டும் எந்த பிரதிபலிப்புமின்றி இருந்தாள். உம்மா எழுந்து வந்து முதுகில் ஒன்று வைத்தாள்.

நான் சொல்றன். காதில விழாதமாதிரி இருக்க நீ? நான் பள்ளிக்கிப் போகமாட்டன்....

ஏன் போகமாட்ட.... என்ன பிரச்சின உனக்கு...

நீங்க வெளிநாடு போனாதான் நான் பள்ளிக்கிப் போவன்...

தூக்கிவாரிப் போட்டது உம்மாக்காரிக்கு. தங்கள் வறுமை நிலை பிள்ளையை இந்த அளவில் நிறுத்தியிருப்பது எண்ணி துவண்டு போனாள்.

சுஹூக்குட்டி... சொன்னா கேளுங்க. நான் வெளிநாடு போனா ஒங்கள பார்த்துக்க யாருமில்லயே...

என்ன மாமிட்ட உட்டுட்டு போங்க...

மாமி ஒங்கள திட்டுவா அடிப்பா... பரவாலயா

அவ அடிக்கமாட்டா

நமக்குனு யாருமில்ல சுஹூதா. நீங்க நல்லா படிக்கணுமெண்டுதான் கடையப்பம் சுட்டு அக்கம் பக்கம் பாத்திரபண்டம் கழுவி உழைக்கிறன்.

என்னத்த உழைக்கிறீங்க.

காலைல ஒரு நாளும் கென்ரீனுக்கு காசு தாறதே இல்ல. ஸ்கூலில ஒரயே கடலதான் தாற. நான் அத தின்னுறதுமில்ல. ஊட்ட வந்தாலும் ஒண்டுமில்ல. தேங்காய்பூவோடு சோறு எப்பிடிம்மா தின்னுற...? என்ற தங்கம்.. பள்ளிக்கிப் போங்க.இன்றைக்கி நல்ல சாப்பாடு செஞ்சு வைக்கன்.

பொய் சொல்லாதீங்கம்மா. நல்ல சாப்பாடெண்டு முட்டையதான் பொரிச்சி வைப்பீங்க..

சுஹூதா சொன்னாக் கேக்கணும். நீங்க படிச்சி டீச்சராகி உழைச்சிதான் எனக்கும் நல்ல சாப்பாடு தரணும்.



☞ 14

போங்கம்மா. நான் அதுக் கெடைல பசியால செத்துருவன்....

உம்மாவுக்கு நா எழவில்லை. கண்கள் பொங்கியது. மிகுந்த சிரமப் பட்டு அடக்கிக் கொண்டாள்.

மஸீஹாட உம்மா கட்டார்லயி ருந்து மஸீஹாக்கு எவ்வளவு சாமான் அனுப்பியிருக்கா. தெரியுமா

மஸீஹாட மாமி எப்பவும் மீனும் இறைச்சியும் புரியாணியும்தா னாம் சமைக்கிற. அவங்க வாப்பா ஒவ் வொரு நாளும் கன்ரீனுக்கு நூறு ரூபா குடுக்க சொல்லி மாமி குடுப்பாங்க ளாம்..

அவ உம்மா. வெளில போனா அவகூட அவ வாப்பா இருக்காரு. உங்கள பார்த்துக்க யாருமே இல்ல தங்கம்... எப்பிடி உங்கள விட்டுப் போவன்.

றௌசானா மாமி ஊட்ல விட் டுட்டுப் போங்களன்மா

சும்மாவே றௌசானா மாமி உங்கள கரிச்சிக் கொட்டுவாங்க .நானில்லாட்டி கேக்கவே வாணாம்.

உம்மா கட்டாருக்கு போய் ஒரு மாசம் மட்டும் உழைச்சிற்று திரும்ப வாங்களேன்.

சுஹூதா... உனக்கு இப்ப என் னதான் வேணும்?

மஸீஹாட உம்மா மஸீஹாக்கு ஒரு பாவப்புள்ள அனுப்பியிருக்கா. அது நம்ம மௌளத்தான தம்பிப் பாப்பா மாதிரியே இருக்கு. அது மாதிரி எனக்கும் வேணும்மா. நீங்க போய் கொஞ்சம் உழைச்சிட்டு ஒரு பாவப் புள்ள வாங்கிட்டு வந்திருங்க...

சரி. முயற்சிப்பம். இப்ப நீ ஸ்கூலுக்கு கௌம்பும்மா

உம்மா போவீங்கதானே..?

சரி போறன் நீ கௌம்பு.

சுஹூதாவை தற்காலிகமாக சமாளித்து பாடசாலைக்கு அனுப்பி. விட்டாள் உம்மா.

சுஹூதாவின் வேண்டுகோளின் படி மஸீஹா பாடசாலைப் பைக்குள் பாவைப்பிள்ளையைக் கொண்டு வந் திருந்தாள். பாடசாலை தொடங்கமுன் இருவரும் மரநிழலில் பாவையோடு விளையாடினர். சந்தர்ப்பம் பார்த்து மஸீஹாவிற்குத் தெரியாமல் பாவைப் பிள்ளையை எடுத்து தனது புத்தகப் பைக்குள் வைத்துக் கொண்டாள் சுஹூதா. பாடசாலை. விட்டதும் அவசர அவசரமாக வீட்டுக்கு ஓடி வந்து விட்டாள்.

உடுப்பை மாற்றி விட்டு புத் தகப் பையை எடுத்து மடியில் வைத் துக் கொண்டாள். அதை திறந்து வெளியே எடுக்க தைரியமில்லை. உம் மாவுக்கு என்ன சொல்வது என்ற பயம். இரண்டாந்தரம் படிக்கும் சுஹூதாவிற்கு தவறை நியாயப்படுத்தத் தெரிய வில்லை.

புத்தகப் பையை அணைத்தவ ளாக தடுமாறிக் கொண்டிருந்தாள். இதை உம்மா அவதானித்து விட்டாள்.

சுஹூதா புத்தகப் பையில என்ன இருக்கு



☞ 15

ஒண்ணுமில்லம்மா. புத்தகங்கள் தானிருக்கு.

இல்ல எதையோ மறைக்க. இஞ்ச கொண்டா புத்தப் பையை.

சுஹூதாவின் கையிலிருந்து பையைப் பிடுங்கி திறந்தாள். பாவைப் பிள்ளையிருந்தது.

இது என்ன சுஹூதா..

பதில் சொல்லவில்லை சுஹூதா... மிரண்டு போனாள்..

முதுகில் ஒன்று வைத்து உண்மைய. சொல் என அதட்டினாள் உம்மா.

விளையாட எடுத்து வந்தன்.

மஸீஹாக்கு தெரியுமா?

இல்..ல.. உம்மா.. நாளைக்கி குடுக்கிறன்.

இப்பவே குடுத்துட்டு வரலாம் வா.

உம்மா அவளை இழுத்துக் கொண்டு வெளியேறினாள்.

உம்மா பயமாயிருக்கும்மா

எடுத்தத குடுக்க மறந்திட்டதா சொல்லிரலாம் வா. இனிமே இப்படி தப்பு செஞ்சா உரிச்சி உப்பு தெறாவிருவன்.

இனிமே பண்ணமாட்டன்மா. மன்னிச்சிருங்க.

மஸீஹா வாசலில் வெயிலில் உட்கார்ந்திருந்து ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். கெண்டைக் காலில் பொசுங்கிய காயம் இருந்தது. பக்கத்தே அடுப்பில் நெல் அவித்து இறக்கிய பெருந்தணல் தகித்துக் கொண்டிருந்தது.

சுஹூதாவையும் அவள் கையில் பாவைப் பிள்ளையையும் கண்ட மஸீஹா. இன்னும் சத்தமாக அழுதாள்.

மன்னிச்சிரு மஸீஹா. திருப்பித்தர மறந்து கொண்டு போய்ட்டன்.

நீதான் கொண்டு போயிருப்பாய்ன்டு நெனச்சன். வீட்டவந்து வாங்கிக்கலாம் எண்டு இருந்தன். பாவப்பிள்ளய தொலைச்சிட்டு வந்திட்டனென்டு மாமி சூடு வச்சிட்டா. கால் வெந்து எரியுது சுஹூதாடம்மா. வாப்பாகிட்ட சொல்லுங்க. எங்க உம்மாவ வரசொல்லச் சொல்லி..

கதை சத்தம் கேட்டு மாமி. வெளியே வந்து பார்த்தாள்.

ஆ...நீங்களா... இந்த டைம்ல?

சுஹூதா மஸீஹாட பாவப்புள்ளய திருப்பிக் குடுக்க மறந்து கொண்டு வந்திட்டா. குடுத்துட்டுப் போக வந்தம்...

எனக்கு பாவப்புள்ள வாணாம். அத தொலச்சதா. சூடு வாங்கிட்டன் தானே. எனக்கு வாணாம். என்ன உங்க வீட்டுக்கு கூட்டிப் போங்க அன்ரி...

ஏய்.. வாய் மூடுடி. வாயில சூடுவச்சிருவன்.

என்ன பேசுறீங்க. அவ குழந்தைப்பிள்ளதானே. ஒங்கள நம்பிதானே

விட்டுட்டுப் போனா. இப்பிடி கொடும செய்ய ஆகுமா?

நீ கொண்டு வச்சிரிந்தா அந்தக் கஸ்ட்டம் தெரியும். வந்திட்டா ஞாயம் கேக்க...

சுஹூதா பாவப்புள்ளயக் குடு. போவம்.

பாவைப்பிள்ளையை வாங்கி அடுப்புத் தணலுக்குள் வீசினாள் மஸீஹா.

எடியேய் ஏன்டி அடுப்புல போட்ட நீ... கழுத...

எங்க உம்மாதானே வாங்கித் தந்த. இந்த பாவப்புள்ளயாலதானே நீங்க எனக்கி சூடுபோட்ட...

இருடி ஒன்னப் பொறகு கவனிச் சிக்கிறன். நீங்க கெளம்புங்க எனக்கி வேல கெடக்கு.

மஸீஹா நகர்ந்து வந்து சுஹூதாவின் தாயின் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

அன்ரி என்ன கூட்டிட்டுப் போங்க அன்ரி. நீங்க போனதுக்குப் பொறகு மாமி என்ன அடிச்சிச் சாக வச்சிருவாங்க அன்ரி.

இது உங்க உம்மாட வீடு நீ எதுக்கு வரணும். நீ தைரியமா இரு. நான் பொலீசுக்கு போய் சொல்றன்.

நானும் கூட வாறன் அன்ரி...

அடம்பிடித்த மஸீஹாவை வாரித் தூக்கிக் கொண்டாள் சுஹூதா வின் தாய். கண்கள் சிவந்து கலங்க அடக்க முடியாத சினத்துடன் வந்து நின்றான் மஸீஹாவின் வாப்பா.

வெள்ளி மட்டும்தான் எனக்கு கடைலீவு. வெள்ளி வந்து சனி சுப ஹூக்கு திரும்ப கெளம்பிருவன். இன் டைக்கி முதலாளிட மச்சான் மௌத்து. கடைய மூடிட்டாங்க. நாள் தவறி. வந்ததாலதான் எம்புள்ளைக்கி நடக்கிற கொடுமைய கண்ணால கண் டன். வேற யாரும் சொல்லியிருந்தா லும் நம்பியிருக்கமாட்டன்....

முதல்ல புள்ளட உம்மாவ திருப்பி எடுங்க...

அததான் செய்யப்போறன். இவள முதல்ல ஊட்ட உட்டு துரத்த ணும். ஒண்ட வந்த பிடாரி ஊர் பிடாரிய விரட்டிச்சாம்..

மஸீஹா குட்டி நாங்க பெய்த்து வாறம் என்ன..

விடைபெற்று வெளியேறினர். சுஹூதா உம்மாவின் கையை இறுகப் பிடித்திருந்தாள். உம்மா புரிந்து கொண்டாள்.

சுஹூதா கைவலிக்குது. நான் உன்ன விட்டு ஓடிரமாட்டன். உம்மா....

என்ன... நீங்க வெளிநாடு போய்ராதீங்கம்மா...

நீதானே போக சொன்ன...?

எனக்கு பாவப்புள்ளயெல்லாம் வாணாம்மா. நீங்கதான் வேணும்....

உம்மா சுஹூதாவை இறுக்கி அணைத்தபடி வேகமாக நடக்கலா னாள்.

# குழந்தை வளர்ப்பு

நஸ்மியா நஸ்மி – கொச்சிக்கடை.



குழந்தைகள் என்பவர்கள் இறைவ னால் எமக்கு வழங்கப்பட்ட அற்புதங் களாகும். அவர்களைச் சரியான பாதையில் வளர்த்தெடுப்பது மிக முக் கியமாகும். விருத்திப் பருவங்களிற் கேற்ப அவர்களைச் சிறந்த முறையில் பாதுகாத்து வளர்த்து எதிர்க்காலத் தில் சிறந்த தலைவர்களாக உருவாக் குவது பெற்றோராகிய எமது கடமை யாகும். பெற்றோர் தங்கள் குழந்தைக ளுக்காக அதிக அன்பு காட்டி வளர்ப் பது அல்லது அதிகளவிலான கண்டிப் பினைக் கைக்கொண்டு வளர்ப்பது முறையானதல்ல. இது குழந்தைக்கு மனரீதியான ஆரோக்கியமல்ல. நல்ல குழந்தை வளர்ப்பென்பது கனிவு, உறுதி போன்றவை கலந்ததாக அமைய வேண்டும். குழந்தையின் உடலுக்கு எவ்வாறு போதனை போன்ற ஆரோக்கியம் அவசியமோ அதே போன்று மனதுக்கும் ஆரோக் கியம் அவசியமானதாகும்.

குழந்தை தவறொன்றை செய் யுமிடத்து பெற் றோர்கள் தங்களது குரலை உயர்த் தாமலும் அதே சம யம் அதனை ஆதரிக்காமலும் தான் அந்த தவறினை உணரும் வகையில் எடுத்துக் கூற வேண்டும். எமது அன் பையும் பண்பையும் அவ்விடத்தில் உணர்த்துவது குழந்தையின் மனதில் ஆழப்பதிகின் றது. இன்னொரு தடவை குழந்தை அந்தத் தவறை செய்யாமல் தன்னை பாதுகாத்துக் கொள்ள நுட் பங்களை பயன் படுத்தி செயல் படுவது அவசியமாகும். உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் என்பவற்றிற்காக நிம்மதியான உறக கமும் அவசியமா கின்றது. குழந்தை நேரத்திற்குத் தூங்குவது குறித்த நேரத்தில் விழிப்பதற் கான பயிற் சியை பெற்றோர் வழங்க வேண்டும். பிறருக்கு நாம் பிள்ளையின் முன்னால் உதவும் போது பிள்ளையும் அதனை பின்பற்ற தொடங்குகின்றது. குழந்தை யின் உணர்ச்சி வெளிப்பாடு, சமூக உறவு என்பன ஒன்றுக்கொன்று பின் னிப்பிணைகின்றது.

குழந்தைக்கு வாசிப்பை கற் றுக் கொடுங்கள். இது வாசிப்பின் மூலம் அனைத்தையும் கற்றுக் கொள் ளும். வாசிப்பின் மூலம் குழந்தையின் உணர்வினை சமநிலைப்படுத்த முடி யும். இது அவர்களின் வாழ்நாள் முழு வதற்குமான வாசிப்பின் தூண்டுதலாக அமையும். குழந்தை சரியான வார்த் தைகளை உச்சரிக்க தவறும் போது அதனை திருத்தி உரிய காலங்களில் சரி செய்து விட வேண்டும். இல்லாவி டின் குழந்தை அதற்கு பழக்கப்பட்டு விடும் நிலை உருவாகும்.

குழந்தை சிறு தவறு செய்யும் போது நாம் கவனமின்றி தடுக்காமல் இருப்பின் தான் செய்தது சரி என குழந்தையின் மனதுக்கு தோன்றும்.



☞ 18

இதனால் எதிர்காலத்தில் சிக்கல் நிறைந்த பிரச்சினைகளுக்கு குழந்தை முகம் கொடுக்க நேரிடும். தவறான வார்த்தைகள் கூறும் போது பெற்றோர் உறவினர் சிரிப்பினை வெளிப்படுத்தல் ஆகாது. இவ்வாறு செய்யும் போது குழந்தையின் மனம் அதனை சரி என ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு சிறு சிறு விடயங்களில் நாம் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

பெற்றோரால் பிள்ளைகள் பலர் பல விடயங்களுக்காக திணிக் கப்படுகின்றனர். பரீட்சைகளின் போது பாடத் தேர்வுகளின் போது இந்த திணிப்பானது மிகை படுகிறது. இத னால் பிள்ளைகள் அதிகளவு மனதள வில் பாதிக்கப்படுகின்றனர். பிள்ளைக ளுக்கு விருப்பமில்லாத விடயங்களில் இந்த திணிப்பு நிகழ்கின்றது. பிள் ளைகள் தன்னை வருத்திக் கொண்டு வெற்றி பெற வேண்டும் என்ற அவசி யமும் கிடையாது. அவசியமான விட யங்கள் தவிர அனாவசிய விடயங்க ளில் பிள்ளை சுதந்திரமாக ஈடுபட வழியமைத்து கொடுக்கப்பட வேண் டும்.

இன்றைய பிள்ளைகள் நாளைய தலைவர்கள் என்பதால் பிள் ளைகளின் மனநிலைக்கு ஏற்ப நடந்து கொள்வது அவசியம் ஆகும். பெற்றோரின பிரச்சினைகள், தேவை யற்ற நட்பு, இழப்புக்கள், தாழ்வுச் சிக் கல், என்பவை பிள்ளைக்கு குழப்ப நிலைகளை ஏற்படுத்தும் பெற்றோரின் பிரச்சினைகள், விவாகரத்து என்பன பிள்ளையை நேரடியாக பாதிக்கும் விடயங்கள் ஆகும். இச்சந்தர்ப்பத்தில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியா மல் பிள்ளை மனரீதியான இன் னல்களுக்கு ஆளாக நேரிடும். எனவே குழந்தையின் மனதை பாதிக் கும் விடயங்களில் இருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண் டும்.

எனவே பிள்ளைகள் உடல் ஆரோக்கியமானவர்களாகவும் உள ஆரோக்கியமானவர்களாகவும் நிகழ்வ தற்கு தாய் கருவுற்றதிலிருந்து பிள்ளை வளரும் பருவம் வரை மிக வும் கண்ணும் கருத்துமாக பெற்றோர் செயற்பட வேண்டியது கட்டாயமான தாகும்.

## ☞ நீங்களும் எழுதலாம்.

01) தினகரன் பத்திரிகை
**shumsfahim@gmail.com**

02) தினக்குரல்
**weekly@thinakkural.lk**

03) தினகரன் வாரமஞ்சரி
**editor.vm@lakehouse.lk**

04) தமிழன்
**thamilanweekly@gmail.com**

# மலர்ந்திடுமா சமாதானம்?



சுற்றும் பூமியில்
சுகங்களும் தொலைந்ததோ?
சுவாசிக்க மறுக்கும்
சித்திரவதை இதுவோ?

தேசமெங்கும்
காபன்காற்றின் விரிசல்கள்,
தேகமெல்லாம் பரவியபடி...
தேற்றிக் கொள்ள
முடியாத நாட்களாய்...

செழித்த பூலோகம்
செங்குருதியில், நனைகிறதே
செருக்குடன் மனிதம்,
செல்லாக் காசுகளாய்.

ஆணவம் ஆயுதமாய்
அரங்கேறும் அவலம்,
ஆகாயம் நடுங்கும்
ஆழ்கடல் தாண்டும் .

தேசம் புகைந்து
சேதம் நிறைந்து,
கருகிய பிஞ்சுடல்கள்
கருவோடு புதைந்து,

உறவுகள் தொலைத்து
உடல்களும் சிதைந்து,
மிஞ்சுவது என்னவோ
எச்சங்கள் மட்டுமே.

கருமேகக் கானகத்தில்
பூக்கும் வெண்புறாவே,
கண்வைத்துப் பார்க்கிறேன்
கூண்டில்... சிறகொடிந்தாயோ?

உள்ளம் திறந்து
உந்தன் வரவிற்காய்,
காத்து நிற்கிறேன்
வெள்ளிச்சிறகை விரிப்பாயென.

ஊனமுற்ற உடல்கள்,
ஊமையான உணர்வுகள்,
உயிர்த்தெழத் திராணியற்று
தொடரும் மௌனங்கள்.

உதிரம் குடிக்கும்
ஏகாதிபத்தியம், மறையாதோ
உலகம் விடியும்
நன்னாளாய் மலராதோ?

அமைதிப் புறாவின் சிறகுகள்
அகங்களை
அலையலையாய் வருடாதோ
சுதந்திர மூச்சுவிட?

மூட்டை முடிச்சுகள்
சுமந்த நாட்கள்,
மூர்க்கமான போர்கள்
குளித்த முடங்கிய நாட்கள்
அகலாதோ?

மனிதம் மதித்து
உணர்வுகள் புரிந்து ,
மகிழ்ச்சிப் புன்னகையில்
மானிடம் மிதக்காதோ....

*சேஹூ மொஹம்மது பெனாஸிரா, - முஸ்லிம் ஹல்மில்லாவ.*

# செல்வக் களஞ்சியமே



தயாரிப்பாளர்
திருமதி வஷீகா இல்ஹாம்

## சிறுவர் பகுதி

**தரம் 04 மாணவர்கள்**
**தி/ ஸாஹிராக் கல்லூரி**
**திருகோணமலை**



பகுதியாசிரியர்
திருமதி மர்ளியா சக்காப்

## பட்டாம்பூச்சி (பாடல்)



I. ஷெஷான்



பட்டாம்பூச்சி சிறகு
பார்க்க பார்க்க அழகு...!
எட்டி எட்டி பாரு
என்ன என்ன அழகு...!
குந்திக் குந்திப் பறந்து
குவிந்த சிறகை விரித்து
எங்கள் மனதைக் கவர்ந்து
நன்றாய் பறக்குது பாரு...!
விட்டு விட்டு மின்ன
வெயிலில் பறந்து செல்லும்
பட்டாம்பூச்சி பாரு
பார்க்க பார்க்க அழகு...!

## புகழனைத்தும்!

M.H. ஹம்தான்



அன்புக்கு அன்னையைத் தந்தான்
அரவணைக்க தந்தையைத் தந்தான்
தோள் கொடுக்க தோழனைத் தந்தான்
பேசி மகிழ்ந்திட நல்ல உறவினைத் தந்தான்

அத்தனையும் ஒன்றாக்கி
என் ஆசிரியராய் உருவாக்கி
அறிவுக்கு வழிகாட்டியே
இறைவனுக்கே புகழனைத்தும்



**R. ரிஹாம்**

The choice is yours...



# எங்கள் பள்ளி...



A.R.M. **ஷிஃபான்**

திருகோணமலையில் எங்கள் பள்ளி
பண்பாட்டைப் பாதுகாக்கும் பள்ளி
காலமாய் கல்வி கற்கும் பள்ளி
பாடங்கள் சிறப்பாய் கற்கும் பள்ளி
கடலோரம் இருக்கும் ஸாஹிரா பள்ளி
வாழ்க்கையை வளமாக்கும் இந்த பள்ளி
அறிவு தரும் அருமையான பள்ளி
எங்கும் புகழ் நிறைந்த எங்கள் பள்ளி
விளையாட்டுக்கள் விளைந்த பள்ளி
இலட்சியம் காட்டும் இலக்கிய பள்ளி
வெற்றிக் கொடி விரிக்கும் எங்கள் பள்ளி
அதுவே எங்கள் பள்ளி...






**ஹிக்மா**

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 3 |
| 6 | 7 | ■ | 9 | ■ |
| 11 | 12 | 13 | 14 | ■ |
| ■ | ■ | 18 | ■ | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 |

### இடமிருந்து வலம்

1-செம்மை + தாமரை என்பதை சேர்த்தெழுதினால்
6-அழியாத செல்வம் (முதல் எழுத்து இல்லை)
11-விதை பன்மைச் சொல்
21-யானையை அடக்கும் பாகனின் கருவி

### இடமிருந்து கீழ்

1-செல்வன் பெண்பால்
2-வியப்பு ஒத்த சொல் (குழம்பி)
3-மகன் - எதிர்ப்பால் சொல்
13-இராமனிடம் அன்பு கொண்ட வேடுவத்தலைவன் (குழம்பி)
20-இல்லை எதிர்ச் சொல்



R. அஸ்னா ஹயா

# வாழ்விழந்த மங்கை

சிறுகதை

சித்தி ஜெஸீனா நிஸ்ரீன்
சாய்ந்தமருது



காலை கதிரவன் சிறகுகளை விரித்து ஒளியை பரப்பிக் கொண்டிருந் தான். கதீஜா அவளது வீட்டு வேலை களை வேக வேகமாக முடித்துவிட்டு பாடசாலைக்கு மகனை அனுப்பி வைத் துவிட்டு அவளது வாழ்க்கையைப் பற்றி சிறிது நேரம் யோசிக்கலானாள். கதீஜாவின் தந்தையும் வங்கியின் முகாமையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். கதீஜா சிறு வயதாக இருக்கும்போதே அவளது தாயை இழந்து விட்டாள். கதிஜாவுக்கு இரண்டு தம்பிமார்கள் அவளது கடை சித் தம்பி பிறந்த நேரம் தாய் பிழைக் காமல் பிள்ளைதான் பிழைத்துக் கொண்டது.

அவளது தந்தை அவர்களது குடும்பத்தில் இருந்து ஒரு மாமியை ஆதரவாக வைத்து பிள்ளைகளை பராமரித்து வந்தார். பிள்ளைகள் பெரி யவர்கள் ஆனதும் கொழும்பில் உள்ள பிரபலமான ஆங்கில மொழிப் பாடசா லைகளில் மூன்று பிள்ளைகளையும் சேர்த்து படிக்க வைத்தார். பிள்ளைக ளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் கதிஜாவின் தந்தையே கவனித்து வந் தார். பிள்ளைகள் மூவரையும் பாட சாலை விடுதியில் சேர்த்திருந்தார்.

மூவரும் தந்தையின் ஆசைப் படி நல்ல கெட்டித்தனமாக படித்து உயர்ந்தார்கள். கதீஜாவும் கம்பியூட்டர் பாடத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந் தாள். நாளடைவில் அவள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரா கப் பணியாற்றலானாள். வேலை முடிந் ததும் பஸ்ஸில் பிரயாணம் செய்வாள்.

இவ்வாறு பிரயாணம் செய்து வீடு திரும்பும் நேரத்தில் வாட்டசாட்ட மான ஒரு இளைஞன் பஸ்ஸின் உள்ளே ஏறிக்கொண்டான். கதிஜாவின் பக்கத்தில் நின்று கொண்டான். கதீஜா போகும் பஸ்ஸில் தான் பிரயாணத்தை மேற்கொண்டான். கதீஜாவோடு மெல்ல மெல்ல கதையை தொடர்ந்து நாளடை வில் உறவு நெருக்கமாகி காதலாக மலர்ந்தது.

கதீஜாவிடம் எதிர்பாராத வித மாக அந்த இளைஞனே ஒருநாள் பேசி னான்.

ஹலோ... எனக்கு உங்கள ரொம்ப பிடிச்சிருக்கு...உங்க அடக்கம் நற்பண்புகள் எல்லாமே.... நீங்க யார் எங்கிறதையும் விசாரிச்சு தெரிஞ்சுகிட் டன்... நான் எங்கவீட்டிலிருந்து உங் களை பெண் கேட்க அனுப்புறன். எங்க வீட்டிலயும் சம்மதிச்சிட்டாங்க. நீங்க யாரையும் விரும்பல்ல என்டு எனக்கு நல்லாவே தெரியும். உங்க விருப்பம் என்ன....?

எங்க வீட்டில சம்மதம் என்டா எனக்கும் சம்மதம்தான் என்றாள் கதீஜா. கதீஜாவின் வீட்டுக்கு ஜின்னாவின் தாய்மாமன் தலைமையில் பெண்கேட்டு அனுப்பினார்கள். கதிஜாவின் தந்தை நான் யோசித்து முடிவை சொல்கின்றேன் என்றார்.

அவருக்கு இந்த விஷயத்தை கேட்டவுடன் கவலையும் அதிகரித்தது. தாய் இல்லாமல் வளர்ந்த பிள்ளை நல்ல ஒருவரின் கையில் கொடுக்க வேண்டும் என்று யோசித்தவாறே அவரது சக நண்பரான தாஹாவுக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார். சலாத்துடன் ஆரம்பித்தார். அவரும் பதிலுக்கு சலாம் கூறிவிட்டு நலன் விசாரித்துக் கொணாடனர். நான் ஒரு விஷயத்தை கேட்கத்தான் தாஹா உங்ககிட்ட போன் எடுத்த என்ட மகள் கதீஜாவை ஒரு குடும்பத்திலிருந்து பெண் கேட்டு வந்திருக்கிறார்கள் அதைப்பற்றி விசாரிக்கத்தான் என்ற வாறு அவர்களின் குடும்ப விபரங்களை நண்பரிடம் ஒவ்வொன்றாக கூறினார் கதீஜாவின் தந்தை.

தாஹாவும் நீங்க கேட்கிறவங்களை எனக்கு நல்லா தெரியும் பிரச்சினை இல்ல முடிக்கலாம் என்றார். கல்யாண ஏற்பாடுகள் நடந்தன திருமணம் இனிதே நடந்தேறியது. நாளடைவில் கதிஜாவின் வாழ்வின் புயல் வீசத் தொடங்கியது. கதீஜாவின் கணவர் அரசியலில் ஈடுபட தொடங்கினார். அமைச்சர் பதவியும் கிடைத்தது.

இதனால் வேலைகள் நாளுக்கு நாள் அதிகரித்ததால் கதீஜாவையும் மகனையும் கவனிக்க அவளது கணவருக்கு நேரம் கிடைப்பதில்லை. தொடர்ந்து இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில் கதீஜாவின் கணவனின் நடத்தையிலும் நிறைய மாற்றங்கள் ஏற்படலாயின. வேறு பெண்களுடன் பழக்கம் குடி கும்மாளம் இப்படி பலவாறான செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டு வந்தன.. இதைக் கேள்விப்பட்ட மனைவி கண்டிக்கத் தொடங்கினாள். அரசியல் வேண்டாம் விட்டு விடுங்கள் என பல தடவைகள் கெஞ்சினாள்.

ஆனால் அதை அவன் காதில் எடுக்கவே இல்லை. சமூக சீர்கேடுகளுக்குள் கதிஜாவின் கணவரும் அடிமையாகி விட்டார். இதை கேள்வியுற்ற ஒரே ஒரு மகன் விரக்தி நிலை அடைந்து நோய்க்கு உள்ளானான் இதை பார்த்து பார்த்து கதீஜாவும் பாரிய மன நோய்க்கு உள்ளானாள். அவளது தாய் தந்தை கொடுத்த சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்றாள். மருந்துவத்திற்கே நிறைய பணம் தேவைப்பட்டது. தற்போது அவளிடம் இருந்த காணி, கார் எல்லாவற்றையும் விற்றுவிட்டு தங்கி வாழும் வீட்டை மட்டுமே வைத்திருந்தாள். இப்படியான நேரத்தில் கதீஜாவின் கணவரும் பாரிச வாத நோய்க்கு உள்ளானார்.

கதீஜாவையும் மகனையும் பார்த்து மிகவும் கவலையுற்றார். கதீஜாவிடமும் மகனிடமும் மன்னிப்பு கோரி கதீஜாவின் கைகளை பிடித்தவாறே மெதுவாக சாய்கின்றான். மரணம் யாரைத்தான் விட்டு வைத்தது. எல்லாமே ஒரு நொடியில் நடந்து முடிந்தது. கதிஜாவின் மகனும் வாய்விட்டு அழுதார்கள். (25ஆம் பக்கம் பார்க்க)

# கால மாற்றம்



**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
**புல்மோட்டை**

முகமறியா நபர்களென்றால்
விரண்டோடும் காலமது
அகமேயறியா நபர்களாயினும்
ஆசை வார்த்தைகள்
தூவிக் கொள்ளும் காலமிது

பொறுமை காத்து
வென்று வரும் காலமது
பொறாமை நிலைத்து
கொன்று புதைக்கும் காலமிது

துளி ஞானமாயினும்
பொழிந்து விடுவது அந்தக் காலம்
தேடிப் போனாலும்
ஒழிந்து கொள்வது இந்தக் காலம்

தாய் சேய் உறவை
உரமாக்குவது அந்தக் காலம்
தாய் யாருக்கு
சேய் யாருக்கென
தட்டிச் செல்வது
இந்தக் காலம்

காலங்கள் மாறி
நிலைகள் மாறி
எல்லாமே மாறி
எங்கோ போய்விட்டன
விதி என நம்பி வீழ்வதா!
சதியென நினைத்து மீள்வதா!

---

(24ஆம் பக்கத் தொடர்........)

உற்றார் உறவினர் எல்லோரும் ஓடி வந்தார்கள்.

எல்லோர் வாய்களிலும் இதே கதை தான் சமூக சீர்கேடுகள் இவரை இந்த நிலைமைக்கு தள்ளிவிட்டது. கதிஜாவினாலும் அவளுடைய நோயாளியான மகனாலும் இதனை ஜீரணிக்க முடியவில்லை. என்ன செய்யலாம் எல்லாம் இறைவன் செயல் தானே என்று உணர்ந்து கொண்டு மரணித்த கணவருக்கு துஆ இறைஞ்சிக் கொண்டிருந்தாள்.

சமூக சீர்கேடுகளுக்கு கணவன் அடிமைப்பட்டதால் குடும்பம் சீர்குலைந்து நிர்க்கதியானது.

# தும்பை செய்கை

**ஆக்கம்:**

**மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்**

**விவசாய போதனாசிரியர் [ ஏறாவூர் ] சம்மாந்துறை, இலங்கை.**



குக்குர்பிடேசி குடும்பத்தினை சேர்ந்த மோமோடிகா இனத்தில் உள்ளடங்கும் தும்பையானது இந்தியாவின் மலாய் பிரதேசத்தினை பிறப்பிடமாக கொண்ட போசணை நிறைந்த மருத்துவ குணமுடைய பல்லாண்டு தாவர மாகும்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளத்தில் (இமயமலை) மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் பயிர்ச்செய்கை செய்யப்படுகின்றது. மேலும் இது வெவ்வேறு சமூகத்தினரிடையே வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

ஆங்கிலம் - Small Bitter gourd> Spine gourd

பெங்காலி - கார்டோலி

இந்தி - ககோரா, பரோரா

சிங்களம் - துப கரவில

∆ 100 கிராம் தும்பை காயில் காணப்படும் போசணை அளவு:

நீர் - 83.2 g
கார்போஹைட்ரேட்டுகள் - 10.6 g
புரதம் - 2.1 g
கொழுப்பு - 1.0 g
கல்சியம் - 23 mg
பொஸ்பரஸ் - 38 mg

இரும்பு - 2 mg

விட்டமின்கள் கரோட்டின் - 126 mg
தியாமின் - 70 mg
ரிபோப்ளேவின் - 60 mg
நியாசின் - 0.4 mg
வைட்டமின் C - 96 mg
சக்தி - 60 கலோரி

மருத்துவ குணங்கள் :

காய்கள்:

# இது சிறுநீர் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வாக அமைவதுடன், இரைப்பை, வயிற்றோட்டம், ஈரல் பாதுகாப்பு மற்றும் வைரஸ் எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது.

# ஆஸ்துமா, தொழுநோய் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் இதற்கு உண்டு.

# அட்டை, பாம்பு கடி, யானைக்கால் காய்ச்சல், மனநல கோளாறுகள் மற்றும் இதய பிரச்சினைகள் தோன்றுவதை தடுக்கிறது.

# நீரிழிவினை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

# முகப்பருவை குணப்படுத்த பயன்படுகிறது.

விதை



☞ 26

# தோலழற்சி, தோல் தொடர்பான பிற பிரச்சினைகளுக்கும் சிறந்த தீர் வினை தருகிறது.

இலை

# கருத்தரித்தலை தூண்டும் இயல்பு டையது.

# சளி, வாதம், பித்தம் போன்ற வற்றை சமநிலைப்படுத்தும்.

# மஞ்சள் காமாலை, ஆஸ்துமா, மூலநோய், கல்லீரல் கோளாறுகள் மற்றும் சிறுநீர் பிரச்சினைகளை நீக்குகிறது.

# தோல் நோய்களுக்கும் பயன்படு கிறது.

வேர்

# தூண்டும் கிருமிநாசினி.

# கட்டு மற்றும் பாம்பு கடிக்கு பயன் படுத்தப்படுகிறது.

## சிறப்பு இயல்பு :

# ஓரில்ல பல்லாண்டு கொடியாகும்.

# வெற்றிகரமான மகரந்தச் சேர்க் கைக்கு பெண் கொடிகள் 10 இற்கு ஆண் கொடி 01 இருத்தல் பொருத்த மானதாகும்.

# மாலை 7 மணியளவில் பூக்கள் பூக் கத் தொடங்கி பூச்சிகளால் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகின்றது.

# இப்பூக்கள் மறுநாள் காலை 07 - 08 மணி வரை திறந்திருக்கும்.

#வெவ்வேறு சிறப்பியல்புகள் உடைய பெண், ஆண் கொடிகள் காணப் படுவதுடன் வெவ்வேறு வடிவங்களில் காய்களும் உண்டு.

மண்:

# ஒரு மீற்றர் ஆழமான இருவாட்டி மண் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமானது.

# பி.எச் வீச்சு 06 - 07 ஆகும்.

## நிலப் பண்படுத்தல்:

நிலத்தினை உழாது களை யினை கட்டுப்படுத்தி மட்டும் அல்லது 30 சென்ரி மீற்றர் ஆழத்திற்கு உழுது மண் கட்டிகளை தூர்வையாக்குவதன்மூலம் பயிர் செய்வதற்கு நிலத்தினை தயார் படுத்திக் கொள்ள முடியும்.

சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்:

* விசல் - பெண் தாவரமாகும்
* கேசர - பெண் தாவரமாகும்
* தும்பக்கா - பெண் தாவரமாகும்
* கோலிகா - பெண் தாவரமாகும்
* பரக்கும் - ஆண் தாவரமாகும்

கலப்பின வர்க்கம் சந்த

* பெண் கலப்பு வர்க்கமாகும்.
*இவ்வர்க்கம் அதிகமாக பயிர்ச்செய்கை செய்யப்படுவதினால் மிகவும் பிரபல்ய மான தாகும்.
* காய் நீள்வட்ட வடிவமாகும்.
*மற்றைய வர்க்கங்களை விட பெரிய காய்களினைக் கொண்டிருக்கும்.
* கடும் பச்சை நிறத்தில் காணப்படும்.
*பழத்தின் மேற்பரப்பு முகடுகள் குறுகிய தும் கடினமானதும் ஆகும்.
*மலர்கள் பெரியவை, வெளிர் மஞ்சள் நிறமானவை.
*பூவின் அடிப்பகுதியில் 03 கரும்புள்ளி கள் காணப்படும்.
*ஒரு ஹெக்டேருக்கு 23 - 30 தொன்

விளைச்சல் கிடைக்கும்.

## நடுகைக் காலம் :

வீட்டுத் தோட்டம் மற்றும் வணிக பயிராக பயிரிடும் போது ஆண்டின் எந்த ஒரு நேரத்திலும் நடுகை செய்ய முடியும். வணிக பயிராக பயிர் செய்வதற்கு உலர் வலயத்தை மட்டுமே தேர்ந்தெடுத்தல் சிறந்தது.

## விதை / கன்று

தேவை :

# பெண் தாவரம் (காய் தும்பை தாவரம்) - ஹெக்டேயருக்கு கன்று 3000 - 6000
# ஆண் தாவரம் (பூ தும்பை தாவரம்) - ஹெக்டேயருக்கு கன்று 300 - 600
#இத்தாவரத்தில் கிழங்கு, வேர், விதை, கிளை துண்டங்களின் மூலம் கன்றுகளை பெறலாம்.
# கிளை துண்டங்களின் மூலம் கன்றுகளை பெறுதல் மிகவும் இலகுவானதும் இலாபகரமானதுமான முறையாகும்.

## கன்றினை நடுதல்:

* நிலத்தினை பண்படுத்தினால் 30* 30* 30* செ.மீ அளவான குழியும்.நிலத்தினை பண்படுத்தாவிட்டால் 45* 45* 45 செ.மீ அளவான குழிகளை தயார் செய்ய வேண்டும்.

* மேல் மண் 02 பங்கிற்கு சேதன பசளை 01 பங்கு கலந்து குழியின் அடியிலிருந்து 10 செ.மீ உயரத்திற்கு குழியினை நிரப்ப வேண்டும்.

* ஒரு குழியில் 01 கிலோ உமி கரியை சேர்த்து மண்வெட்டியால் கிளறி விட வேண்டும்.
*தரிசு மண்ணாயின் அடிக்கட்டு பசளை கலவையின் பரிந்துரைக்கப்பட்ட அளவு கலவையையும் சேர்த்து கலக்க வேண்டும்.
*ஒரு குழிக்கு ஒரு நாற்றை நடுதல் வேண்டும்.
* 10 பெண் நாற்றுகளுக்கு 01 ஆண் நாற்று எனும் விகிதாசாரத்தில் நடுதல் வேண்டும்.
* செயற்கை மகரந்தச் சேர்க்கை செய்வதாயின் ஆண் நாற்றுகளை தனி வரிசையில் நடுகை செய்ய வேண்டும்.
* மாலையில் நடுதல் சிறந்தது. வெயிலில் இருந்து பாதுகாக்க நிழல் படுத்த வேண்டும்.
* தாவரத்தை ஆதாரத்துடன் கைற்றின் மூலம் கட்டுதல் வேண்டும்.

## Δ இடைவெளி :

வேலி முறையில் மற்றும் பந்தல் முறையில்
* வரிசை இடையே - 1.5 மீற்றர்
* நாற்றுகளுக்கு இடையில் - 02 மீற்றர்

## பசளை பிரயோகம் :

02 மாதத்திற்கு ஒரு தடவை ஒரு குழிக்கு சேதன பசளை 06 கிலோ கிராம் இடுவதன் மூலம் வெற்றிகரமான விளைச்சலினை பெற முடியும்.

## செயற்கையாக மகரந்தச் சேர்க்கை செய்தல் :

உயர் விளைச்சலுக்கு செயற்கை மகரந்தச் சேர்க்கை செய்தல் அவசியம்



☞ 28

ஆகும். தும்பை பூக்கள் இரவில் பூப்பத னால் மகரந்தச் சேர்க்கையை முடியு மான வரை காலையிலேயே மேற் கொள்ளல் வேண்டும்.

* அதிகாலை 5.30 மணிக்கு முன் ஆண் பூக்களை ஒரு தட்டில் பறித்து ஆண் பூக்களின் இதழ்களை மடக்கி மகரந் தத்தை பெண் பூக்களின் குறியில் பூச வேண்டும்.
* மகரந்தச் சேர்க்கையினை காலை 9.00 மணிக்கு நிறைவு செய்தல் வேண்டும்.

அறுவடை செய்தல் :

முதல் அறுவடை காலமானது பயிர் நடும் முறைக்கமைய பின்வருமாறு வேறுபடும்.

* விதை மூலம் - 03 மாதங்கள்
*கிழங்கு மூலம் - 02 - 2 1/2 மாதங்கள்
* கொடிகள் - 02 - 2 1/2 மாதங்கள்
* தரிசுநில செய்கை - 55 - 60 நாட்கள்
#வாரம் இருமுறை அறுவடை செய் யலாம்.
#மகரந்தச் சேர்க்கையின் பின் 14 நாட்களில் அறுவடை செய்யலாம்.

# படித்துச் சுவைத்தது.

## M S S கலீமா - திருகோணமலை



இஞ்சி எதனுடன் எப்படி சாப்பிட்டால் பலன் கிடைக்கும்...?

1. இஞ்சி சாறை பாலில் கலந்து சாப் பிட வயிறு நோய்கள் தீரும். உடம்பு இளைக்கும்.

2. இஞ்சி துவையல், பச்சடி வைத்து சாப்பிட மலச்சிக்கல், களைப்பு, மார்பு வலி தீரும்.

3. இஞ்சியை சுட்டு உப்பில் தோய்த்து சாப்பிட பித்த, கப நோய்கள் தீரும்.

4. இஞ்சி சாறில், வெல்லம் கலந்து சாப்பிட வாதக் கோளாறு நீங்கி பலம் ஏற்படும்.

5. இஞ்சியை புதினாவோடு சேர்த்து துவையலாக்கி சாப்பிட பித்தம், அஜீர ணம், வாய் நாற்றம் தீரும். சுறு சுறுப்பு ஏற்படும்.
6. இஞ்சியை, துவையலாக்கி சாப்பிட வயிற்று உப்புசம் இரைச்சல் தீரும்.

7. காலையில் இஞ்சி சாறில், உப்பு கலந்து மூன்று நாட்கள் சாப்பிட பித்த தலைச்சுற்று, மலச்சிக்கல் தீரும். உடம்பு இளமை பெறும்.

8. பத்துகிராம் இஞ்சி, பூண்டு இரண்டை யும் அரைத்து, ஒருகப் வெந்நீரில் கலந்து காலை, மாலை இரண்டு நாட் கள் சாப்பிட மார்பு வலி தீரும்.

# The extraordinary...!

லைலா அக்ஷியா

There she is...
As a menstruating lady Although she's in agony She'll still smile gently
Although She is pestered And flustered
She'll still be concerned For someone
With endless chores
She'll forget her woes

Bearing her own miseries
She'll try to ease
Someone else worries

Though she's anxious She'll try to solace
A soul in distressed

Although
She's frail,
When she fails
In little things
She'll be criticized And disciplined
She'll still be cooking And serving someone
While nauseating

She'll still commute Despite feeling delicate

She'll do her best
For someone to rest up
Although feeling fatigue

Amidst of ceaseless
Errands and tasks
She'll still be committed To help someone In her daily life

Though she's deprived Of her rights
She prays
For others everyday

Her malaise
Is normalized As a natural phenomenon

She'll disguise everything Behind a smile and grin

Who's she.. ?
No one except The woman...!
She's extraordinary
And praiseworthy
Salute to her...

Translated by :
Mareena Ilyas Shafee
Tamil poem by:
Lila Akshiya

(1st draft)
**Dr. Mareena ilyas shahfee**

## அவள் ஒரு மகா நடிகை!

அதோ அவள் மாதவிடாய்க்
காரியாக
அதே வேதனையில்
தன் முன்னிலையுடன் சிரித்துக்



☞ 30

கொண்டிருப்பாள்

அதே கடுப்பில்
யாரோ ஒருவர் கடுகடுப்பிற்காக
மனம் நொந்து கொண்டிருப்பாள்

அதே வலியை
முழுநேர வேலையில் மறந்து
கொண்டிருப்பாள்

அதே ரணத்தில் யாருக்கோ ஆறுதல்
வார்த்தைகள்
தெளித்துக் கொண்டிருப்பாள்
அதே உளைச்சலில்
யாருக்கோ மருத்துவம்
பார்த்துக் கொண்டிருப்பாள்.

அதே பலவீனத்தில் சிறுபிழைக்கும்
தண்டிக்கப்பட்டுக் கொண்டிருப்பாள்

அதே குமட்டலில் யார்
வயிற்றுக்கோ
பசியாற்றிக் கொண்டிருப்பாள்

அதே உடைசலில்
ஒரு பேரூந்தில் அசையாமல் நின்று
கொண்டிருப்பாள்

அதே களைப்பில் யாருடைய
ஓய்வுக்காகவோ
உழைத்துக் கொண்டிருப்பாள்

அதே சுழற்சியில்
யாருக்காகவோ ஆயுளில்
சுழன்று கொண்டிருப்பாள்

அதே விலக்கில்
யாருக்கோவெல்லாம் இறைஞ்சிக்
கொண்டிருப்பாள்

இந்த வலிகளெல்லாம்
இயற்கைதானென வெகுவாக
சாதரணமாக்கப் பட்டுமிருப்பாள்

அதே எல்லாவற்றையும்
மறைத்து உன்முன் இப்போது
புன்னகைத்துக் கொண்டிருப்பாள்

அந்த யாரோவெல்லாம் அவளுக்கு
யாரோவேவல்ல!

அவள் தான் பெண்
அவளுக்காக வாழ்த்துகிறேன்!!

## ☞ நீங்களும் எழுதலாம்.

05) மித்திரன்
**Mithmithiran@gmail.com**

06) துணிந்தெழு சஞ்சிகை
**skytamil.lk@gmail.com**

07) தமிழ்நெஞ்சம்
**editor@tamilnenjam.com**

08) வேட்டை நு.அயடை
**Vettai007@yahoo.com**

09) நடு சஞ்சிகை
**editornadu@gmail.com**

10) காமதேனு
**kavithai@kamadenu.in**

11) காற்றுவெளி இதழ்
**mahendran54@hotmail.com**

12) கொலுசு
**kolusu.in@gmail.com**

# நான் வாசித்து, ரசித்த நாவல் – ரசனைக்குறிப்புகள்.

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன். – கிண்ணியா**

எழுத்தாற்றல் என்பது உண் மையிலேயே இறைவனால் ஏற்படுத்தப் பட்ட இணையற்ற ஒரு அருள் என்று தான் குறிப்பிட வேண்டும்.

அத்தகைய ஆற்றல் கிடைக் கப்பெற்றவர்கள், சுற்றுப்புறச் சூழலில் தங்களை பாதித்த விடயங்களையும், தங்களது எண்ணத்தில் உதித்த விட யங்களையும் சிறந்த இலக்கியங்க ளாக்கி விடுவதில் வல்லவர்கள்.

நிலத்தை ஒரு ஏர் செழுமைப் படுத்துவது போன்று, ஒரு மனிதனது வாழ்க்கையை புத்தகங்கள் செழுமைப் படுத்தி விடும் எனலாம்.

ஒவ்வொரு புத்தகமும் நாம் படிக்கும் போது ஒவ்வொரு மனிதரது வாழ்க்கையை நாம் வாழ்ந்த அனுப வத்தை நமக்கு தருகின்றது.

அந்த வகையில் சிறந்த வாசிப்புக்காய் ஒரு மாலைப் பொழுதை இனிமையாக் கிய அழகான ஒரு நாவல் பற்றியே இங்கு நாம் பார்க்கப் போகின்றோம்.

கம்பளையைச் சேர்ந்த எழுத் தாளர் அஸ்மா டீன் எழுதிய "ஆலமரம் நாவல்" அண்மையில் வாசிக்க கிடைத் தது. இது அவர்களின் கன்னி வெளி யீடு என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலமரம் நாவலின் நாவலாசிரி யர் அஸ்மா டீன் அவர்களும் பாட சாலை காலங்களிலேயே தனது எழுத் தாற்றல் மூலம் பல பரிசில்களை பெற்றுக் கொண்டவர்.

காலத்துக்கேற்ற விடயங்களை மையமாக வைத்த கதைகளாக தான் வாழும் சமூகம் சார்ந்த விடயங்களை எழுத்துக்கள் மூலமாக விழிப்புணர்வு செய்வதில் நம்பிக்கையோடு செயல் படுபவர். தேசிய நாளிதழ்களில், சஞ்சி கைளில் இவரது ஆக்கங்கள் அடிக்கடி வெளி வந்து கொண்டிருக்கின்றன.

இவரது நாடகங்கள் வானொலி யில் அடிக்கடி ஒளிபரப்பப்படுவதும் இவரது சிறந்த எழுத்துக்கான சான்றுக ளில் ஒன்று எனலாம்.

இலக்கியக் குடும்ப பின்னணியில் உதித்தவர் என்ற சிறப்பும் இவருக் குண்டு. இவர் பாட்டனார் 1928 இல் வெளிவந்த தினத்தபால் நாளிதழின் ஆசிரியரும், சிறந்த எழுத்தாளரு மான மர்ஹூம் மீரான் முஹித்தீன் அவர்க ளின் வாரிசு (பேத்தி) என்பதும் குறிப் பிடத்தக்கது.

ஆலமரம் நாவலானது, மிகவும் பாசமான ஒரு குடும்பத் தலைவர் ஐந்து பெண் குழந்தைகளை படிக்க வைத்து வளர்த்தெடுக்க படும் பாட்டை சித்திரிப்பதோடு, ஒரு குடும்பத் தலை வன் எப்படி வாழ வேண்டும் என்பதை யும் உணர்த்தும் கதையாக அமைந் திருக்கின்றது.

60 வயதுக்கு மேல் அரசாங் கமே ஓய்வு கொடுத்தாலும் கடைசி

☞ 32

வரைக்கும் "தந்தையருக்கு ஓய்வே இல்லை" என்பது இந்த நாவலை படிக் கும் அனைவருக்கும் புரியும்.

அதிகமான பெண் மக்களை பெற்ற தந்தை, தான் பெற்ற பிள்ளைகளுக்காக தனது வாழ்க்கை கோலத்தை எவ்வாறெல்லாம் வரைய வேண்டும் என்பதை மிக அழகாக சித் திரித்திருக்கிறார் கதாசிரியர்.

ஆரம்பமே ஆஸ்பத்திரி வளா கம்... பெண் குழந்தை பிறப்பும், உற வினர்களின் மகிழ்ச்சியுமாக நம்மையும் தொற்றிக்கொண்டு தான் நாவல் ஆரம் பமாகின்றது.

எத்தனை எத்தனை கவலை கள் வேதனைகள் நம்மை ஆட்கொண் டாலும் சின்னஞ்சிறு மழலையின் முகம் பார்த்து துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று விடலாம். என்ப தனை ஆப்தீன் மாஸ்டருக்கூடாக நமக்கு உணர்த்தப்பட்டிருக்கிறது.

வீட்டு முற்றத்து ஆலமரத்தை போன்று, ஒரு குடும்பத் தலைவனின் வாழ்வு அமைந்திருக்கின்றது என்பதை

"தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒரு விதை, தெண்ணீர் கயத்து சிறுமீன் சினையிலும் நுண்ணியதே ஆயினும், அண்ணல் யானை அணித்தோர் புரவி அருள் ஆள் பெரும் படையொடு மன் னர்க்கு இருக்க நிழலாகுமே" என் றபாடல் மூலமும் உணர்த்தியிருப்பது வாசிப்போரின் கவனத்தை ஈர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இது போன்ற பத்து பாடல்கள் நாவலுக்குள்ளே ஆங்காங்கு காணப் படுகின்றது.

அதிகமான பெண்பிள்ளைகள் பெற்றோ ருக்கு பெரும்சுமையே என அங்க லாய்ப்போருக்கு ஆப்தீன்மாஸ்டரதும், பிள்ளைகளதும் வாழ்வு ஒரு எடுத் துக்காட்டு.

பாலர் பாடசாலை, கார் மெண்ட்ஸ் பொறுப்பு, தையல் நிலை யம் என பெண்களுக்கான சுயதொழில் காட்டப்பட்டு இருப்பது சிறப்பு.

வீட்டின் புறவளவு பகுதிகளில் கீரை, மரக்கறி பயிரிட்டு அதில் வரும் வருமானங்களில் தனது பிரத்தியே வகுப்புகளுக்கு பணம் கட்டுவது பெற் றோரின் சுமையை குறைக்க பிள்ளை கள் மேற்கொள்ளும் சிறந்த முயற்சி யாக காட்டப்பட்டிருப்பது அருமை.

கணவனால் கைவிடப்பட்டா லும் பெற்ற பெண்கள் மன தைரியத் தோடு போராடும் கதாபாத்திரமாக சுபைதா கதாபாத்திரம் சித்திரிக்கப்பட் டிருப்பது விழிப்புணர்வு. இப்படியாக குடும்பத் தலைவனை மையமாக வைத்து பின்னப்பட்ட கதை, கிளைப ரப்பி பரந்து விரிந்து செல்கின்றது.

கதை முடிவில் அந்த வீட்டுக்கு அழகு சேர்த்த ஆலமரம் வெட்டப்பட்டு அடியோடு சரிந்த போது ஆப்தின் மாஸ்டர் தனது வாழ்க்கை பயணத்தை முடித்துக் கொண்ட விடயம் வாசிப் பாளர்களின் உள்ளங்களை கலங்கிப் போகத்தான் செய்கிறது. கடைசியாக கொடுத்திருந்த கவிதை வரிகளில்

"எம்மை ஏற்ற வழிச் செய்த போற்றத் தகு பெற்றோர் தம், மூடாத விழிகளையும்மௌத்தில் மட்டுமே மூடி கொள்வர்"

என்ற வரிகள் நம் மனதை கனதியாக் கித்தான் விடுகின்றன.

இப்படியாக அழகிய ஆலமரத் தின் படம் கொண்ட அட்டை படத்து டன் 150 பக்கங்களில் தெளிவான மொழி நடை.. காலத்துக்கேற்ற சிந்த னைத் தெளிவுள்ள வசனங்கள், எதார்த்தங்களை உண்மைகளாக எழுதி வாசகர்களை தன்பால் ஈர்த் தெடுக்கின்ற ஆதர்சிப்பு என்பன இந்த நாவலை வாசிக்கின்ற வாசகர்கள் அனைவரையும் விரும்பி வாசிக்க வைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படியான நல்ல புத்தகங் களை, கதைகளை தேடி வாசியுங்கள். பெற்றோர்களின் தியாகங்களை சிந் தித்து இருக்கும் பெற்றோர்களை நன் றாக பார்த்துக் கொள்ளுங்கள். அவர் கள் எம்மை விட்டு பிரிந்திருந்தால் அவர்களுக்காக அதிகம் அதிகம் பிரார்த்தனை புரியுங்கள்.

எதிர் காலங்களிலும் இது போல இன்னும் பல நூல்களை கொண்டு வர வேண்டும் என்ற பிரார்த்த னையுடன் நூலாசிரியர் அஸ்மாடீன் அவர்களை மனமார வாழ்த்துவோம்.

# கால சுழற்சி

தொன்று தொட்டு இன்று வரை,
கால சுழற்சி தனில் மாற்றங்கள்
நாணயம் கொண்ட இருபக்கமாய்
இங்கு நல்லவரும் தீயவரும்
வாழ்வ துண்டு

மனம் தன்னில் வஞ்சம் வளர்க்கும்,
தீய வர்க்கமிங்கு பகை போற்றும்.
மனித நேயங்கள் மலிவாகிச் சாகும்.
மண்மீதில் மானுடம்
விலையாகிப் போகும்

வேகமாய் சுழலும் காலச் சக்கரம்
வையகம் எங்கினும் போர்களின் உக்கிரம்
வஞ்சகக் கண்களில் உறையும் வக்கிரம்,
தீயோரால் வழி மாறும் சரித்திரம்

எண்திசையும் ஆராயும்
நவீன தொழிநுட்பம்
விண்தொட வைத்தவன்
விஞ்ஞான மதிநுட்பம்
உழைப்பை எருவாக்க
விளைச்சல்கள் கைசேரும்
நல்லவன் எழுதிடுவான்
வெற்றிகளால் சுயசரிதம்



**வஃபீரா வஃபி**

தையல் குறிப்பு


# விரிந்த பாவாடை



சில்மியா ஷாப்தீன் – கண்டி

ஒரு விரிந்த பாவாடையை வெட்டுவதற்கு நீங்கள் விரும்பும் துணியை தேர்வு செய்யவும். துணியின் அளவைக் கணக்கிடும் போது, இடுப்பிற்கான மடிப்புகளின் அளவு மற்றும் அவற்றின் உயரத்தைப் பொறுத்து அது வேறுபடும். மிகக் குறைந்த மடிப்புக்களைக் கொண்ட பாவாடையைத் தைக்க விரும்பினால், இடுப்பு அளவின் அரை பகுதியை மடிப்புகளுடன் சேர்த்து அதனை நான்கால் வகுக்கவும். அந்த அளவுடன் இடுப்பின் உயரத்தைச் சேர்க்கும் போது, அதுவே தேவையான துணியின் அகலமாகும். எமக்கு அது போன்று இரண்டு மடங்குத் துணித் தேவைப்படும். தேவையான துணியின் அளவை இவ்வாறு கணக்கிட முடியும்.

தேவையான துணியை எடுத்து இரண்டாக மடிக்கவும். அதனை மீண்டும் ஒபிளேயார்ட் (முக்கோண வடிவில்) வடிவத்தில் மடித்து இடுப்பு அளவின் அரைப்பகுதியை மடிப்புகளுடன் சேர்த்து 4 ஆல் வகுக்கவும். அவ அளவினை மடிப்பின் மேல் மூலையில் இருந்து (புள்ளி A இலிருந்து) குறித்து வளைவை வரையவும். அதன் பிறகு, அந்த வளைவிலிருந்து தேவையான உயரத்தைக் குறித்து இடுப்பு விளிம்பிலிருந்து சமமான தூரத்தில் கீழ் வளைவை வரையவும். அவ்வாறில்லை எனின் டேப்பின் (அளவு நாடா) மேல் நுனியில் உள்ள துளையில் பென் சிலை வைத்து இடுப்பு விளிம்பையும் பாவாடையின் வளைவையும் வரையவும். இவ்வாறு வரையப்பட்ட இடுப்பு மற்றும் விளிம்பு வளைவுகள் வரைபடத்தில் புள்ளியிடப்பட்ட கோடுகளால் காட்டப்பட்டுள்ளன. அந்த




புள்ளி யிடப்பட்ட கோடுகளின் வழியே பாவா டையை வெட்டிக் கொள்ளவும்.

## பட்டிகளைப் (பேண்ட்) மடிப்பு எடுத்தல் (சுருக்குதல்)

அவ்வாறு வெட்டிய பாவாடையின் இடுப்புக்கு சுமார் 4 அங்குல

அகலமுள்ள துணித் துண்டை வெட்டி பிடியுங்கள். அதனை மடித்து 1அரை அங்குலம் அளவில் பட்டியின் ஓரங்களைத் தைத்துக் கொள்ளவும். இடுப்பு சுற்றளவினை விட 4 அல்லது 6 அங்குலம் குறைவாக 1அரை அங்குல அகல இலாஸ்ட்டிக் எடுத்து அதன் உள்ளே செலுத்தி இரு பக்கமும் இரண்டு முனைகளையும் தைக்கவும். நடுவில் நான்கு தையல்களைத் தைத்து அதைச் சுற்றி இலாஸ்ட்டிக்கை இழுத்துத் தைக்கவும். அல்லது இடுப்பின் அளவுக்கு ஒரு பட்டியை (பேண்ட்) வைத்து அதைச் சுற்றி பாவாடையை சுருக்கி (மடிப்பெடுத்து) ஒரு பக்கத்தில் திறக்கக் கூடியவாறு தைத்துக் கொள்ளவும்.

விளிம்பு (ஓரத்தை) தையல்

விளிம்பைத் தைக்கும் போது, விளிம்பை ஒரே தடவை சுமார் அரை அங்குலத்திற்கு மடித்து தைத்து மீண்டும் ஓரத்தை மடித்து தைக்கவும். அல்லது விளிம்பை ஓவர்லக் செய்து மீண்டும் மடித்து தைக்கவும்.

பாவாடையின் மடிப்பின் அளவை சரி செய்தல்

அதிக மடிப்புகள் தேவை எனின் இடுப்பைப் போன்று இரண்டு மடங்காக அளவு எடுத்து 4 ஆல் வகுக்கவும். பாவாடையில் மடிப்புகள் இல்லாமல் தைக்கும் போது இடுப்பின் சுற்றளவை 4ஆல் வகுக்கவும். இவ்வாறு எடுத்த இடுப்பு சுற்றளவிற்கு சமமாக பாவாடையின் இடுப்புச் சுற்றளவினை வெட்டுங்கள். (இல்லையெனில் இடுப்பளவை 3ஆல் வகுக்கவும்.)

---

# ☞ நீங்களும் எழுதலாம்.

13) படிகள் சஞ்சிகை
**Padihal@gmail.com**

14) பேசும் புதிய சக்தி
**pesumpudhiyasakthi@gmail.com**

15) கதிர்ஸ்
**sspondicherry076@gmail.com**

16) அகழ்
**akazhonline@gmail.com**

17) வளரி
**Valaripoems09gmail.com**
**+917871548146**
**valari9@gmail.Com**

18) ஜீவநதி சஞ்சிகை
**Jeevanathy@yahoo.com**

19)மெட்ரோ
**Metrokavi@gmail.com**

20) விடிவெள்ளி
**aaramviral.vidivelli@gmail.com**

# ஆளுமை அறிமுகம்

## செவ்வி கண்டவர் - ஷாமென் நிஸாம்டீன்



எமது காலாண்டு சஞ்சிகையான அவரி 15 அலங்கரிக்கின்றார் சிரேஷ்ட எழுத்தாளரான கலா பூஷணம் இராணி பௌசியா.. இராணி பௌசியா வடமத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மாவட்டத்தில் கல்லளை எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். தான் பிறந்த ஊர்ப் பாடசாலையான அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும் தனது ஊருக்கு அண்மையில் அமைந்துள்ள கதுருவெல பொலன்னறுவை தேசிய பாடசாலையில் உயர்தரத்தையும் கற்றார். இவர் ஆயிரத்துத் தொள்



ளாயிரத்து தொண்ணூற்று இரண்டாம் ஆண்டு ஆசிரியர் சேவை யில் இணைத்துக் கொள்ளப்பட்டார். ஆசிரியசேவைக் காலங்களில் மாணவர்களுக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஆர்வமூட்டும் வகையில் பயிற்சி அளித்து தேர்ச்சி பெறச் செய்தார். தமிழ் மொழித் தினம் ,கலை விழாக்கள், மீலாத் விழா, வரவேற்பு நிகழ்வுகள், திறப்புவிழா போன்ற நிகழ்வுகளுக்கு வரவேற்புப் பாடல் நாட்டார் பாடல், இசையும் அசைவும் நிகழ்ச்சிக்குப் பாடல் ஆக்குவது முதல் நாடகம் வில்லுப் பாட்டு கவிதையாக்கம் கட்டுரை சிறுகதை சிறுவர் கதைகள் போன்ற நிகழ்வுகளைத் தயாரித்து வழங்கிப் பயிற்சி அளித்து போட்டிகளில் பங்கு பெறச் செய்து வெற்றியீட்டுவதற்கு விடாமுயற்சி எடுத்திருக்கின்றார்.

கேள்வி :1

பாடசாலை கல்வியை முடித்தவுடன் ஆசிரியப் பணியில் இணைந்த உங்களுக்கு இலக்கியத்துறையில் எப்படி நாட்டம் ஏற்பட்டது?

பதில்:1

பாடசாலைக் கல்வியை முடித்த பிறகு வாழ்க்கைப் பயணம் ஆரம்பமானது. நான்கு பிள்ளைகளைப் பெற்ற பிறகு தான் எனக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. ஆயிரம் உறவுகள் இருந்தாலும் சற்றுத் தனிமைப்படுத்தியது விதி அவ்வப்போது மக்களுக்காக சில தாலாட்டுப் பாடல்களை நானாகவே உருவாக்கிப் பாடினேன். மகளுக்கு சிறப்பான குரல்வளம் அதனால் சில

சினிமாப் பாடல்களை மாற்றம் செய்து இஸ்லாமிய கீதங்களாகப் பாடப் பயிற்சி அளித்தேன். ஆசிரிய நியமனம் கிடைக்கப்பெற்ற போது மாணவர்களுக்கு சில ஆக்கங்களை எழுதிக் கொடுத்தேன். ஆர்வம் மேலிட்டது படிப்படியாக நானே என்னை எழுதத் தொடங்கினேன். கலையுலகிக்கு அதனை பத்திரிகைகள், சஞ்சிகைகள், கவியரங்கம், வானொலி தொலைக்காட்சி, கவிக் குழுமங்கள் என ஒப்புவித்தேன்.

கேள்வி:2

கவிதை ஒருவருள் ஊற்றெடுப்பது. அந்த வகையில் உங்களிடம் இயற்கையாகவே இலக்கியத்துறையில் ஆர்வம் மாத்திரமல்ல திறமையும் குடிகொண்டுள்ளது. ஆரம்ப கால எழுத்துலக பிரவேசமும் அதற்கான விமர்சனங்களும் எப்படி இருந்தன?

பதில்:2

ஆமாம்கவிதை கறக்கப்படுவதில்லை அது சுரக்கப்படுவது என்ற ஒரு கவிஞனின் கூற்றுக்கமைய எந்த இடத்திலும் கவிதை வரும் அப்போது அந்த இடத்தில் நின்றே கவிதை புனைவேன். அதே போல் இலக்கியத்துக்கு வயது கிடையாது என்பார்கள்.ஒரு குழந்தையின் தானத்தில் நின்றும், பிள்ளையின் இடத்தில் இருந்தும், இளைஞர் யுவதிகளின் வயதில் இருந்தும், ஒருதாயின் தவிப்பு நிலையில் இருந்தும், வயோதிக நிலையில் இருந்தும் கவிதைகள் எழுதினேன். அவற்றுள் இளைஞர் யுவதிகளுக்கிடையிலான விரகதாபங்களைப் படம் பிடித்துக் காட்டுவது போலான கவிதைகள் எசப்பாட்டுக்கள்




எழுதும் போது, கிராமியக் கவிதைகள், நாட்டார் பாடல்கள் போன்றவை எழுதும் போது அந்த இடத்துக்கு இணங்கித்தானே ஆகவேண்டும். அப போதுதான் சிற்சில விமர்சனங்கள் காதுகளுக்கு வந்தேறின.

அந்த வேளையில் உன்னை யாராவது புகழும்போது செவிடனாயிரு. இகழும்போது ஊமையாகவிரு என்ற விவேகானந்தரின் அறிவுரையை நினைத்துக் கடந்து செல்வேன்.

கேள்வி :3

இலக்கிய ஆளுமை மிக்கவரான நீங்கள், உங்கள் மாணவர்களை இத்துறையில் ஈடுபட வழிகாட்டியாக இருக்கின்றீர்களா? எவ்வாறு அவர்களை ஊக்கப்படுத்துகின்றீர்கள்?

பதில்:3

ஆமாம் எனது மாணவர்களை மாத்திரமல்ல எங்கள் பாடசாலை மாணவர்கள் அல்லாதவர்களையும் இலக்கியத் துறையில் ஊக்கப்படுத்துகின்றேன். கவிதை கட்டுரை சிறுவர் பாடல்கள்

சிறுகதை ஆக்கம் நாடகம் வில்லுப் பாட்டு என பல நிகழ்ச்சிகளுக்கு களம மைத்துக் கொடுத்திருக்கின்றேன். தமிழ் மொழித் தின இசையும் அசை வும் போட்டி நிகழ்ச்சிக்கு வேற்றுப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடல் எழுதிக் கொடுத்திருக்கின்றேன். குறிப் பிட்டுச் சொல்வதாக இருந்தால் பொலன்னறுவை மாவட்டத்தை மைய மாகக் கொண்டு இரண்டாயிரத்துப் பதி னான்காம் ஆண்டு நடாத்தப்பட்ட சுஜாத்த தறுவோ போட்டிக்கு குழுப் பாடல் தனிப்பாடல் வீதி நாடகம் என அத்தனைக்கும் நான் மாத்திரமே எழு திப் பயிற்றுவித்து போட்டியில் பங்கு கொள்ள அழைத்துச் சென்று வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கான பரி சுப் பொருட்களை ஏற்றி வருவதற்கு வாகனம் இல்லாத காரணத்தால் அதி பருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து வாகனம் வரவழைத்து அவ்வளவு அதி கமான பரிசுப் பொதிகளை எடுத்து வந்த அந்த நிகழ்வை மறக்க முடியாது.

கேள்வி:4

நீங்கள் எழுத்துலகில் பிரவேசித்த காலகட்டத்திற்கும் தற்போதைய இலக்கிய உலகிற்கும் என்ன வேறு பாட்டை காண்கிறீர்கள்?

பதில் - 4

நான் எழுத்துலகில் பிரவேசித்த காலப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட சிலரே இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய் யக்கூடியவர்களாகவும் தரமான படைப் புக்களை முன்வைக்கக் கூடியவர்களா கவும் இருந்தார்கள். அதிகமானோர் வாசகர்களாக காணப்பட்டார்கள். இடைப்பட்ட காலத்தில் சற்று முன்னே ற்றம் அடைந்தாலும், கொரோனாவுக் குப் பிறகு புலனம், வாட்செப் என எதனை எழுதினாலும் பணத்தை வாங் கிவிட்டு அதற்கு விருதுகளும் சான்றி தழ்களும் வழங்கி கௌரவிக்கும் அதி கமான இலக்கியக் குழுமங்கள் உரு வாக்கப்பட்டதன் காரணமாக எழுத் தாளர்களின் எண்ணிக்கை துரித வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால் ஆக்கங்களின் தரம் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு இல்லாதது கவ லையே.

கேள்வி: 5

விமர்சனங்கள் உங்களை புடம் போட்டு உயர்த்தியதா அல்லது மன உளைச்சலுக்கு உள்ளாக்கியதா?

பதில்:5

வேலை இல்லாதவர்களின் பொழுது போக்குக் கருவிதான் விமர்சனங்கள். அவற்றுக்காக நாம் ஏன் கவலைப்பட வேண்டும். நான் முதலாவது புத்தகம் வெளியீடு செய்யும் போது ஆசிரியர் விடுதியிலேயே இருந்தேன். அப்போது என்னிடமே சொன்னார்கள். “எழுதுகிற புத்தகம் வெளியீடு செய்கிற வேலையை விட்டு விட்டு முதலில் வீடு கட்டுகிற வேலையைப் பாருங்கள்” என்று. விமர்சனங்கள் உந்து சக்தி யாக இருந்து என்னை உயர்த்தியதே தவிர எந்த மன சங்கடங்களையும் தந் ததில்லை.

கேள்வி: 6

கற்பனையில் கதை, கவிதை படைப்

போர் சிலர்.. தாம் சமூகத்தில் கண்ட தையே கருவாகக் கொண்டு படைப் போர் சிலர்.. அதில் நீங்கள் எந்த வர்க்கம்? அவற்றிற்கான அங்கீகாரம் எப்படி..? மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது உண்டா?

பதில்: 6

நான் கண்ட அனுபவங்களையே கவி தையாக, சிறுகதைகளாக, சிறுவர் பாடல்களாக வடித்தேன். உதாரண மாகக் கூறினால் ஒரு குழந்தை பிறந்து நாற்பது நாட்கள் ஆகமுன் னமே தாய் வெளிநாடு சென்று விட் டார். அக்குழந்தை உம்மும்மாவிட மும் சாச்சிடமும் வளர்ந்தது. அந்தப் பிள்ளையின் வளர்ச்சியை நான் பக் கத்தில் இருந்து படிப்படியாக உணர்ந் தேன். அவனுக்காக இந்தக் கவிதை சாபமா! பாவமா !!!

பத்து விரல்களைப் பதியிலே ஊன்றி அவன் தத்தித் தவழ்கையிலே பக்கத் தில் நின்று பார்த்து இரசித்திட அம்மா அவன் அருகில் இல்லை தட்டுத் தடு மாறித் தாவிப் பிடித்தவன் தரையினில் நடக்கையிலே கட்டிப் பிடித்துக் கனி வாய் முகர்ந்திட அம்மா அவன் அரு கில் இல்லை புத்தகப் பையைப் பத்தி ரமாய்த் தூக்கி அவன் பள்ளிக்குச் செல்கையிலே பாதையோரம் நின்று பார்த்து வழி அனுப்பிட அம்மா அவன் அருகில் இல்லை பள்ளி கலைந்து பரிதவித்து வந்தான் அவன் பருகிடச் சாதம் இல்லை சொல்லி அழுதே சோகத்தைத் தீர்த்திட அம்மா அவன் அருகில் இல்லை படிபடி என்று படிய வைத்தார்கள் அவன் மடிந்ததைப் பார்க்கவில்லை தலையிடி காய்ச் சலில் துடியாய்த் துடித்தான் அம்மா அவன் அருகில் இல்லை தன் இதயத் தோடு தாய் இதயம் இறுக அணைத்த படி தூக்கக் கலக்கத்தில் கண் விழித் தான் உதய சூரியன் ஒளிக் கரம் நீட்டி னான் அம்மா அவன் அருகில் இல்லை தனிமைக் கொடுமையில் தவித்து மடியும் மகன் செய்த பாவம் என்ன




அதே போல் சிறுகதையும் ஒரு வளர்ப்பு மகள் சொத்துக்காக தாயைக் கொடுமை செய்து கொன்றது வளைகுடா நாட்டிலே வாலிபம் தொலைத்திடும் தாய் செய்தது நியா யமா என்ன

கேள்வி:7

படைப்புகள் காலத்தின் கண்ணாடி என்பதற்கமைய உங்களுடைய எழுத் தும் சமூகத்தோடு ஒன்றிணைந்துள் ளது. எழுத்துலகில் நீண்ட தூரம் வந் துள்ள உங்கள் பயணத்தில் பல வெற்றிப்படிகள், அங்கீகாரங்கள் கிடைத்திருக்கும். உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி கூறுங்க ளேன்..

பதில்:7

கலைப் பயணத்தின் முதற்படியாக இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண் டு அகயாத்திரையும் அகலாத்திரை யும் என்ற கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டேன். அதிஷ்டவசமாக நூல் வெளியீட்டு விழாவில் நயவுரை வழங்கிய மர்ஹூம் கலைவாதி கலீல் அவர்களால் மூத்த ஊடகவியலாள ரும் எழுத்தாளருமான நூருல் ஐன் நஜிமுல் ஹுசைன் அவர்களுடைய மின்னும் தாரகை நூலில் இடம் பிடித்தேன். அதனை அடுத்து அருள் வாக்கி அப்துல் காதிர் கலைக் குழுவி னரால் அருள்வாக்கி வித்துவதீபம் வழங்கி கௌரவிக்கப்பட்டேன். அதனை அடுத்து இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு ஸ்கை தமிழ் துணிந்தெழு சஞ்சிகை இணைந்து வழங்கிய ஆளுமைகளுக் கான விருது கிடைக்கப் பெற்றேன். எல்லாவற்றையும் விட மேலான கலாபூ ஷணம் அரச விருது இரண்டாயிரத்து இருபத்து மூன்றில் கிடைக்கப் பெற் றேன். அல்ஹம்துலில்லாஹ்

கேள்வி: 8

ஆரம்பத்தில் இருந்து இன்று வரை உங்கள் இலக்கிய பயண வெற்றிக்கு உறுதுணையாக மாத்திரமல்ல தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தியவர்கள், அதற்கு வழி காட்டியவர்கள் என பல ரும் இருந்திருப்பார்கள். இத்தரு ணத்தில் அவர்களைப் பற்றியும் கூறுங் கள்..

பதில்:8

நான் கவிதை எழுதத் தொடங்கிய நேரம் கண்ட கண்ட இடங்களிலெல் லாம் எழுதி வைப்பேன். நாட்காட்டி, நாட்குறிப்பு ஏடு, பாடக் குறிப்புப் புத்த கத்தின் பின்பகுதி என்று கவிதை எழுத எப்போதெல்லாம் தோணுதோ அப்பப்ப எழுதி வைப்பேன். அதனால் பல தொலைந்து விட்டன. இதைப் பார்த்த மகன் எனக்கு இரண்டு குறிப் புப் புத்தகங்கள் வாங்கித்தந்து ஒன்று நாட்டார் பாடல்கள் எழுதுவதற்கு ஒன்று கவிதைகள் எழுதுவதற்கு என்று சொன்னார். அதுதான் முதன் முதலில் எழுத்தார்வத்தை உண் டாக்கியது. புத்தக வெளியீட்டின் போதும் கூட புத்தகம் அச்சிட உதவி யாக இருந்தார். ஊர்மக்கள் அனைவ ரும் திரண்டு மேடை அமைத்து பழம் பெரும் கவிஞர்களான மர்ஹூம் மணிப் புலவர் மருதூர் மஜீட், மர்ஹூம் கலை வாதி கலீல், சந்தக் கவி கிண்ணியா அமீர் அலி, நாச்சியாதீவு பர்வீன் ஆகி யோரை அழைத்து வெகு சிறப்பாக வெளியீட்டு விழாவை நிகழ்த்தினார் கள். அதனையடுத்து மர்ஹூம் கலை வாதி கலீல் மூலமாக மூத்த ஊடக வியலாளரும் எழுத்தாளருமான நூருல் ஐன் நஜிமுல் ஹுசைன் அவர்களின் மின்னும் தாரகையில் இடம் கிடைக் கப் பெற்றேன். நூருல் ஐன் சகோதரி மூலமாக சட்டத்தரணி ரசீட் இம்டி யாஸ் அவர்களுடைய தலைமையில் மீலாத் கவியரங்கம் வானொலி நிகழ் வில் கலந்து கொண்டேன். அந்நிகழ்ச் சியில் கலந்து அறிமுகமான கமர் ஜான் சகோதரி மூலமாக வாட்செப் இலக்கியக் குழுக்களில் கலந்து எழு தத் தொடங்கினேன். படிப்படியாக முக நூலில் நுழைந்து இலங்கை இந்திய இலக்கியக் குழுமங்களில் எழுதினேன் அப்போது ஸ்கை தமிழ் துணிந்தெழு சஞ்சிகை இணைந்து நடாத்திய

ஆளுமை கௌரவிப்பில் விருது கிடைத்தது. அடுத்த நாள் நூருல் ஐன் சகோதரி மூலமாக நேத்ராவின் நேர் காணல் இடம்பெற்றது. கலாபூஷணம் கிடைக்கப்பெற்றபோது மதுர சுந்தரம் முஸ்தாக் அஹமட் அவர்களின் குவி யம் கலை மையகத்தின் வாழ்த்துச் சான்றிதழும் சிறீலங்கா பென் கிளப் பின் கௌரவிப்பு விருதும் கிடைத்தது .

தொடர்ந்து முன்னா அழகுக் கலை நிறுவன முனாபிரா ரிஸ்வான் பாரதி யின் புதுமைப் பெண் விருது வழங்கி னார். இடையிடையே எனது கவிதைப் புத்தகங்களை வாங்கி வாசித்தவர்க ளின் விமர்சனங்கள். முகநூலில் பீ டீ அஸீஸ் சேருடைய ஆளுமைகள் தொடரில் என்னை தேர்வு செய்தது. எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் என்னுடைய மூன்றாவது நூலை தொகுத்துத் தந்த கவிஞர் சாலிஹ் அஸீம் சகோதரர் இப்படியாக என்னு டைய இலக்கியப் பயணத்தில் என் னோடு கைகோர்த்து பக்கபலமாக நின்று இன்று வரை அழைத்துச் சென்று கொண்டிருப்பவர்கள், என்றும் மறக்க முடியாதவர்கள்.

கேள்வி: 9

இலங்கையில் குறிப்பிடக்கூடிய அமைப்பான ஸ்ரீலங்கா பென் கிளப் பின் ஓர் மூத்த ஆளுமையாகவும் அங் கத்தவராகவும் பயணம் செய்கிறீர்கள். அவ்வமைப்பு பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:9

இது சிறந்த கேள்விதான் ஆற்றல் உள்ள பெண்களைத் தட்டிக் கொடுத்துத் தரப்படுத்தி இவர்களின் ஆளுமையை உலகுக்கு வெளிச்ச மிட்டுக் காட்டுவதில் முன்னிலை வகிக் கிறது சிறீலங்கா பென் கிளப் என்றால் அது மிகையாகாது. அதிலும் சிறீ லங்கா பென் கிளப்பின் தலைவி வித்தகர் மஷூறா சுஹூறுத்தீன் அவர் களின் இடையறாத முயற்சி பல்வேறு துறைகளில் பெண்களைப் பயிற்று விக்க காட்டும் ஆர்வம், பெண்களின் மனச்சுமைகளைக் களையவும் களம மைத்துக் கொடுத்து சுதந்திரமாகப் பயணிக்கவும் இலகுவழிப் பாதயமைத் திருக்கிறார்

கேள்வி: 10

இறுதியாக வளர்ந்து வரும் படைப்பா ளிகள் தமது துறையில் நீண்ட தூரம் காலூன்றி நிற்கவும் சிறப்பான சமூகத் திற்கு தேவையான விடயங்களை படைப்பதற்கும் எவ்வாறான வழிகாட் டல்களை கொடுக்க விரும்புகின்றீர் கள்? அல்லது அவர்களுக்கு கூறும் அறிவுரை என்ன?

பதில்:10

வளர்ந்து வரும் படைப்பாளிகள் என் னும் போது நாங்களும் வளர்ந்து விட் டோம் என்று அல்ல நாங்களும் தான் கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்ற கூற்றுக்கமைய நாம் கருத்தில் கொள்ள வேண்டியது முத லில் எழுத்துப் பிழைகள். எழுத்துப் பிழைகள் வருவது வாசிப்புக் குறை பாட்டினால்தான். அதற்காக நிறையப் புத்தகங்களை, பத்திரிகைகளை, சஞ் சிகைகளைத் தினமும் தேடி வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிக்கும் போது




எழுத்துப் பிழைகளைக் களையலாம். எழுத்துப் பிழைகள் களைந்தால் தர மான படைப்புக்களை தரலாம் .இப் போதெல்லாம் ஒரு கட்டுரையின் ஒரு பந்தியில் நான்கு வரிகளை நாற்பது துண்டுகளாக வரிசைப் படுத்தித் தலைப்பிட்டு அதனைக் கவிதை என்று சொல்கிறார்கள். சில இலக்கியக் குழு மங்கள் அதற்கு விருதுச் சான்றுகள் வழங்குகிறார்கள். அது வளரும் இளம் படைப்பாளிகளுக்கு சில உழைப்பாளி கள் செய்யும் துரோகமாகும். அதனால் சிறந்த கவிதை எது எது தரமற்ற கவிதை என்பதைக்கூட இளம் படைப் பாளிகளுக்கும் அடுத்த பரம்பரையி னருக்கும் தெரியாமலே போய்விடும். அதனால் தான் நாம் மூத்த எழுத்தா ளர்களின் படைப்புகளை தேடி வாசிக்க வேண்டும். படைப்புக்களின் விதிமுறைகளைக் கவனிக்க வேண் டும். தன்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். வகைகளைக் கண்டறிய வேண்டும். அப்போதுதான் எழுத்துப்பி ழைகள் அற்ற தரமான தன்மைமாறாத படைப்புக்களை நாமும் தரலாம். நம் சந்ததியினரும் வாசித்து பயனடைவார் கள்.

## ☞ நீங்களும் எழுதலாம்.

(21) நவமணி
**Jalatharangam6@gmail.com**

(22) 0740060056 வளர்பிறை **FM**

(23) **Muththmizh Kalasam@gmail.com.**

(24) **vennilakavithaimanjari@gmail.com**

(25) **editor@tamilnenjam.com**

(26) கீறல் 0758238199

தகவல் **SLPC**

# சுவைக்கலாமா? சமையல் பகுதி.

**ஷியாஸ்னா பைஸல் - நாவலப்பிட்டி.**



ஓட்ஸ்பிரவ்னி

தேவையான பொருட்கள்:

வறுத்து அரைத்து ஓட்ஸ் 100கிராம்
கெஸ்ரோ சுகர் 120கிராம்
சொக்கலட் சிப்ஸ் 100கிராம்
முட்டை 2
மாஜரின்100கிராம்
கொக்கோ பவுடர்20கிராம்
பேக்கிங் பவுடர் ஒரு தேக்கரண்டி
வெனிலா எசன்ஸ் ஒரு தேக்கரண்டி

செய்முறை: வறுத்து அரைத்த ஓட்ஸ், கெஸ்ரோசுகர், கொக்கோ பவுடர், பேக்கிங் பவுடர் அனைத்தையும் மூன்று முறை நன்றாக சலித்து வைத் துக்கொள்ளவும்.

அடிகணமான பாத்திரத்தில் நீரூற்றி நீராவியில் சொக்கலட்சிப்ஸையும் மாஜரீனையும் நீராவியில் வைத்து கரைத்துக்கொள்ள வேண்டும். நன்கு கரைந்த பிறகு நீராவியில் இருந்து வெளியே எடுத்து முட்டையையும் வெனிலா எசன்ஸ்ஸையும் சேர்த்து நன்கு கலக்கவும் அதோடு சலித்து வைத்தவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக இட்டு கட்டி படாமல் நன்கு கலக்க வேண்டும். பின் பட்டர் தடவிய தடவிய சதுரவடிவான தட் டில் கொட்டி 25 நிமிடம் 200உபேக் பண்ணி எடுத்துதா ஓட்ஸ் பிரவ்னி ரெடி.

பஸ்பூஸா

ரவை 1 கப்
பால் மா 1 கப்
முட்டை 6
வறுத்த தேங்காய் துருவல் 1கப்
சீனி அரைத்தது 1 கப்
மாஜரின் 50g
வாசனையற்ற எண்ணெய் 1 கப்
வெனிலா எசன்ஸ் 1 டீ ஸ்பூன்
உப்பு ஒரு சிட்டிகை

சீனி பாகு செய்ய
சீனி 2 கப்
தண்ணீர் 1 கப்
தேசிக்காய் சாறு ஒரு தேக்கரண்டி

செய்முறை: ஒரு பிளண்டர் ஜாரில் முட்டை, மாஜரீன், எண்ணெய், வெனிலா எசன்ஸ் விட்டு ஒரு சுற்றி எடுக்கவும் பின் மீதமுள்ள அனைத்து பொருட்களையும் இட்டு இரண்டு மூன்று சுற்றி நன்கு பிளண்டரில் அடித்து பட்டர் பூசிய தட்டில் கொட்டி 25 நிமிடங்கள் 180உல் பேக் செய்து எடுத்துக்கொள்ளவும். பின் அதை சதுர தூண்டுகளாக தட்டில் வைத்தே வெட்டிக் கொள்ளவும். பின் சீனிப்பாகு தயார் செய்ய ஒரு வாணலியில் 2கப் சீனியையும் ஒரு கப்பளவு நீரும் சேர்த்து கொதிக்க விடவும் நன்கு கொதித்ததும் அடுப்பில் இருந்து இறக்கி தேசிக்காய் சாறு ஒரு தேக் கரண்டி விட்டு வெட்டப்பட்ட பஸ்பூஸா துண்டுகளுக்கு மேல் ஊற்றி ஊற வைத்து பரிமாறலாம்.

# சுவைக்கலாமா? சமையல் பகுதி.



**பானு ஜிப்ரி - சாய்ந்தமருது**

காளான் குருமா

தேவையான பொருட்கள்

காளான் - 200 கிராம் வெங்காயம் - 1, பொடியாக நறுக்கியது தக்காளி - 1, பொடியாக நறுக்கியது இஞ்சி பூண்டு விழுது - 1 டீஸ்பூன் மஞ்சள்தூள் - 1/4 டீஸ்பூன் மிளகாய்த்தூள் - 1/4 டீஸ்பூன் காஷ்மீரி மிளகாய் தூள் - 1/2 டீஸ்பூன் தனியா தூள் - 1 டீஸ்பூன் கரம் மசாலா தூள் - 1 டீஸ்பூன் கறிவேப்பிலை - சிறிது சீரகம் - 1/4 டீஸ்பூன் எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன் கொத்தமல்லி தழை - சிறிது உப்பு - தேவையான அளவு அரைக்க தேங்காய் - 5 டேபிள் ஸ்பூன் முந்திரி பருப்பு - 5 சோம்பு - 1 டீஸ்பூன் பட்டை - 2 சிறிய துண்டு கிராம்பு - 3 கல்பாசி - சிறிது மிளகு - 1 டீஸ்பூன் கசகசா - 1 டீஸ்பூன் உடைத்த கடலை - 1 டீஸ்பூன்

மேலே குறிப்பிட்ட பொருட்களை சிறிது தண்ணீர் விட்டு நைசாக அரைத்துக் கொள்ளவும்.

செய்முறை

1. குக்கரில் எண்ணெய் விட்டு சூடானதும் சீரகம் சேர்த்து லேசாக பொரிந்ததும் பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும்.

2. பின் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கவும். அவை வதங்கியதும் தக்காளி சேர்த்து வதக்கவும்.

3. தக்காளி பாதியளவு வதங்கி யதும் கறிவேப் பிலை, மஞ்சள்தூள், மிளகாய்த் தூள், காஷ்மீரி மிளகாய் தூள் மற்றும் தனியா தூள் சேர்த்து வதக்கவும். பின் நறுக்கிய காளான் துண்டுகளை சேர்த்து வதக்கவும்.

4. பின் அரைத்த தேங்காய் விழுதை சேர்த்து புரட்டி 1.5 கப் தண்ணீர் விட்டு கலந்து தேவையான அளவு உப்பு சேர்த்து கலந்து கொள்ளவும். பின் கரம் மசாலா தூள் சேர்த்து மூடி வைத்து மிதமான சூட்டில் 3 விசில் வரும் வரை வேகவைத்துக் கொள்ளவும்.

5. குக்கரில் இருக்கும் ஆவி தானாக அடங்கியதும் பொடியாக நறுக்கிய கொத்தமல்லி தழை கலந்து இறக்கவும். சூப்பரான காளான் குருமா தயார்.

# வாரி வழங்கும் பண்பான கொடை வள்ளல்களாக தகப்பனும், புத்திரரும்.

Copied - எம்.ஜே.எம்.நி:மத்துல்லா
பாலமுனை - 07/07/2025

நளீமியாவில் முழுமையான இலவசமாக 1986/93 கல்வியாண்டில் கல்விகற்ற இறுதி மாணவர் தொகுதி யினர் நாங்கள் என்பதில் பெருமை கொள்கிறோம். அல்ஹம்துலில்லாஹ்.

1990/91 கல்வியாண்டில் பல் கலைக்கழக பரிட்சைக்கு தயாராகுவற் காக நளிமியா நோன்புகால விடுமுறை நாட்களில் 5ம் ஆண்டு மாணவர்களான நாங்கள் 27 பேர் தங்கி படிக்கவேண்டி ஏற்பட்டது.

நோன்பு திறப்பற்காக நளீம் ஹாஜியார் அவர்கள் எங்களுக்கு 10 kg நிறை கொண்ட 3 ஈத்தம்பழப் பெட் டிகளை நோன்பு ஆரம்பிப்பதற்கு முன் னர். வழங்கினார்கள். ஹாஜியார் நோன்பு காலங்களில் பேருவலையில் இருந்தால் தராவீஹ் தொழுவதற்காக அதிகமாக நளீமியா வளாக பள் ளிக்கே வருவது வழமையாகும், நளீ மியா மீது அவருக்கிருந்த பற்றே அதற்கான காரணமாகும்.

நோன்பு காலத்தில் நளிமியா விடுமுறை காலமாக இருந்த போதும், நாங்கள் அங்கு தங்கி கற்றதனால் தொழுகை நிறைவு பெற்றதும் எங்களு டன் சற்றுநேரம் உரையாடுவதற்காக நளியாமிவின் நிருவாகக் கட்டிடத் திற்கு கீழ் இருக்கும் பலகை வாங்கில் அமர்ந்திருப்பது வழமையாகும்.

மூன்றாவது நோன்பு தராவிஹ்



தொழுகையின் பின்னர் இவ்வாறு கதைத்துக் காணெ்டிருக்கும் போது எங்களில் ஒரு மாணவன் கடிந்து கொள்வாரோ என்ற பய உணர்வுடன், ஹாஜியார் என மிக அமைதியாக பல தடவைகள் அழைத்தார் அதனை செவியுற்ற ஹாஜியார் என்ன என, அவ ரது சாந்த குணத்துடனான குரலில் வினவினார். அப்போது எங்களில் மற்று மொரு நண்பன் நீங்கள் ஏலவே தந்த ஈத்தம் பழம் அனைத்தும் (மூன்று நாட் களில் 30kg வையும் 27 பேரும் விரை வாக தின்று தீர்த்து விடடோம் என்ற பய உணர்வு) முடிந்து விட்டது என்று கூறினார்.

அவரோ பரோபகாரி என்பத னால் என்னவோ கோபம் கொள்ளாமல் எங்களை கடிந்து கண்டிப்புடன் நடந்து கொள்ளாமல், எங்களது தாமதமான கோரிக்கையை மனவருத்தத்துடன் கடிந்து கொண்டு இவ்வாறு கூறினார்.

“சா நேற்று இரவு நீங்கள் சொல்லியிருந்தால் கொழும்பு வீட்டில்



☞ 46

நல்ல இன ஈத்தம்பழம் இருக்கிறது கொண்டு வந்திருப்பேன் எற்றார்கள்". பின்னர் சற்று தாமதித்து,

"பறவாயில்லை மகன் யாகூத் கொழும்பில் தான் இருக்கிறார் அவரை கொண்டுவரச் சொல்கிறேன் அவருக்கும் வேலைகள் இருக்கும் அதைவிட உங்களது தேவை முக்கியம் இன்ஷா அல்லாஹ் பார்ப்போம்" என்று சொல்லி விட்டு எங்களது சுகத்தை விசாரித்து சற்று சுவாரஸ்யமாக கதைத்து விட்டு அவரது மிகச் சிறிய சிவப்பு நிற காரில் சென்றார்கள் எங்களது அறிவுத் தந்தை. எங்களது வீட்டில் ஈத்தம் பழங்களை விரைவாக தின்று தீர்த்த இச்சம்பவம் நடந்திருந்தால்!! எங்களை எங்கள் பெற்றோர்கள் நிச்சயம் கடிந்து கொண்டி ருப்பார்கள்.

மறு நாள் காலை விலையுயர்ந்த ஜீப்ரக வாகனத்தில் 16 அல்லது 20 வயது மதிக்கக்தக்க மிகவும் வெண்மை நிறம்கொண்ட கட்டழகான ஒரு மாணவப்பருவ வாலிபன் எங்களது "நத்வி" விடுதிக்கு முன் வாகனத்தை நிறுத்தி வாகனத்தை விட்டு இறங்கி நீங்கள் தானே இரவு வாப்பாவை சந்தித்தவர்கள். அதனை எதிர்பாத்துக் கொண்டிருந்த நாங்கள் ஆம் என்றோம்

உடனே அந்த வாலிபன் ஈத்தம்பழ பெட்டிகளை தன் கரங்களால் இறக்க முனைந்த போது நாங்கள் அதனை எடுக்கச் சென்றோம் அப்போது அவர் கூறிய வார்த்தை " நீங்கள் உலமாக்கள் (அப்போது நாங்கள் நளிமியாவின் உயர்வகுப்பு மாணவர்கள் அவ்வளவுதான்) நீங்கள் இறக்க வேண்டாம் நான் இறக்கித் தருகிறேன் வாப்பாவும் உலமாக்களாகிய நீங்கள் தூக்குவதனை விரும்பமாட்டார்கள்" என கூறிய வார்த்தை எங்களை கண்கலங்கச் செய்து, எங்கள் மனங்களில் உயர் இடத்தை பெற்ற, எங்களது பிரார்த்தனைக்கு சொந்தக்கார அந்த வாலிபன் வேறு யாருமல்ல அவர்தான் தன் தந்தையின் பின்னர் நளிமியாவின் நிருவாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் பண்பாளர், செல்வச் செருக்கற்றவர், நாகரிகத்தின் உறைவிடம், கற்றோரை மதிக்கத் தெரிந்தவர், இஸ்லாமிய பண்புகளை அணிகலனாக கொண்ட அப்போதை வாலிப இளைஞன் யாகூத் நளீம் ஹாஜியார் அவர்கள்.

இச்சம்பவம் எங்கள் வகுப்புத் தோழர்களின் மனங்களில் பசுமரத் தாணி போல் இன்றுவரை இரைமீட்டிக் கொண்டிருக்கிறது.

இறைவன் அறிவுத் தந்தை மர்ஹூம் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் (ரஹ்) அவர்களுக்கு ஜன்னத்துல் பிர்தௌசுல் அ∴லா எனும் உயர் சுவனத்தை வழங்குவானாக ஆமீன்

நளீமியாவின் இயக்குனர் சபைத் தலைவர் யாகூத் நளீம் ஹாஜியார் அவர்களுக்கு சிறந்த உடல் ஆரோக்கியத்தையும், வாரி வழங்கும் கொடை வள்ளல் மனோபக்குவத்தையும், ஹலாலான சம்பாத்தியத்தையும், இறைபாதையில் செலவு செய்யும் மனோபக்குவத்தையும், செல்வத்தில் பரக்கத்தையும் ஏற்படுத்துவானாக ஆமீன் ஆமீன் யா ரப்பல் ஆலமீன்.

# 2024 பாரதி கண்ட புதுமைப் பெண் விருதுபெற்ற SRILANKA PEN CLUB அங்கத்தவர்கள்



சம்மாந்துறை
மஷூறா



S U கமர்ஜான் பீபீ
ஹுனுப்பிட்டி



மர்ளியா சக்காப்
திருகோணமலை



ஷாமென் நிஸாம்டீன்
கட்டுகஸ்தோட்டை



இராணி பௌசியா
பொலன்னறுவை



9 772961 519006